


Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 430 பிலவ வருடம், தை மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை
(17.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 13, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




# அரசியல் தீர்வுக்கு பேச்சுவார்த்தை!

## ஜனாதிபதி கோட்டா நாளை விசேட அறிவிப்பு
## மாத இறுதியில் தமிழர் தரப்புகளுடன் பேச்சு

தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வு வழங்குவதற்குரிய பேச்சுகளை இம்மாத இறுதியில் ஆரம்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்தியாவின் ஆதரவுடனான இந்த இனநல்லிணக்க முயற்சிகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவிக்கவுள்ளார். நாளை செவ்வாய்க்கிழமை நாடாளு மன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தும்போது இது தொடர்பான விசேட அறிவிப்பினை ஜனாதிபதி வெளியிடவுள்ளார்.

02 பக்கம்



## வாக்குறுதிகள் அனைத்தும் 3 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும்

### ஜனாதிபதி தெரிவிப்பு!

10 பக்கம்

## எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு நிவர்த்தி

### லிட்ரோ கேஸ் நிறுவனம் அறிவிப்பு

நீண்டகாலமாக நிலவிவந்த எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்திசெய்யப்பட்டுள்ளதாக லிட்ரோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது விநியோகத்திற்கு தேவையான எரிவாயு சிலிண்டர்கள் உள்ளன.

இதன் காரணமாக மக்கள் வரிசைகளில் காத்திருக்கத் தேவையில்லை.

02 பக்கம்

LITRO GAS



கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வழிபாட்டில் ஈடுபட்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதுடன் அங்கு வந்த மக்களுடனும் அளவளாவினார்.

## யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா



09 பக்கம்

## களு கங்கையில் நீராடிய நால்வரில் மூவர் மரணம்

சிறிபாகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஸ்ரீ பாலபந்தல பகுதியில் நேற்று முன்தினம் (15) பிற்பகல் வேளையில் களு கங்கையில் நீராடிக்கொண்டிருந்த நால்வர் நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் அவர்களில் மூவர் உயிரிழந்த நிலையில், ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

02 பக்கம்



தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் நேற்று இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகின்றனர். (படம்: கிருஷாந்தன்)

## சிங்களவர்கள் தற்போதுதான் பொருளாதாரத் தடையை உணர்கிறார்கள் – சிறீதரன் எம்.பி



05 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



எதுக்கெடுத்தாலும் அரசாங்கத்தை குறை சொல்லுறது பெஷன் ஆகிட்டுது. உது கூடாது பாருங்கோ...



## வெளிநாட்டவர் வெளியேறும்போதே ஒமிக்ரொன் பாதிப்பு தெரியவருகிறது

### சுகாதார தொழில்சார்துறை சங்கத்தின் தலைவர் சாடல்

நாட்டில் ஒமிக்ரொன் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது சுகாதார அமைச்சின் செயல்திறன் இன்மையை வெளிப்படுத்துகின்றது என சுகாதார தொழில்சார்துறையினர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார். மேலும், புதிதாக 160 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை சுகாதார அமைச்சின் குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

### உஷ்



ஜனாதிபதியின் செயலாளர் பதவியிலிருந்து விலகிய ஜயசுந்தரவுக்கு அவரின் நண்பர் ஒருவர் எஸ்.எம்.எஸ் ஒன்றை அனுப்பினாராம்.

"நாட்டு நிலைமை எப்படிப் போகிறது?" என்று அந்த குறுஞ் செய்தியில் கேட்டாராம் அந்த நண்பர்.

அதற்கு ஜயசுந்தர, "நாட்டை கடவுள் தான் காப்பாற்றவேண்டும்" என்று ஒரே வரியில் பதிலளித்தாராம்.

"நாட்டின் பொருளாதார விடயங்களில் சுமார் 2 தசாப்தகாலமாக தீர்மானம் எடுத்தவர் இப்படிச் சொல்லலாமா?" என்று கவலைப்பட்டாராம் அந்த நண்பர்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையின் ஏற்பாட்டில் கலை, கலாசார மத நிகழ்வுகளுடன் கூடிய தைப்பொங்கல் சிறப்பு விழா நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

## பொலிஸ்மா அதிபர் பதவியை மெல்கம் ரஞ்சித்திடம் வழங்குக!



02 பக்கம்

### ஞானசார தேரர் காரசாரம்

## தடையில்லா எரிபொருள் விநியோகத்திற்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர் தேவை

### அதை திரட்டுவது குறித்து ஆராய ஜனாதிபதி தலைமையில் விசேட கூட்டம்

2022ஆம் ஆண்டு முழுவதும் எண்ணெய் இறக்குமதிக்கு தேவையான நான்கு பில்லியன் அமெரிக்க டொலரை திரட்டுவதற்கான வழிகள் குறித்து ஆராயும் உயர்மட்ட கலந்துரையாடலொன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் விரைவில் நடைபெறவுள்ளது. மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, நிதி மற்றும் எரிசக்தி அமைச்சுகள், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அதிகாரிகளும் இந்த கூட்டத்திற்கு அழைக்கப்படவுள்ளனர்.

02 பக்கம்

# தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொங்கல் விழா










***தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் நேற்று தைப்பொங்கல் விழா இடம்பெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான உதயகுமார், வடிவேல் சுரேஷ், வேலுகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.*** ***(படங்கள்: கிருஷாந்தன்)***

## களு கங்கையில்...

நீரில் மூழ்கியவர்களில் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதுடன், 10 வயது சிறுவன் ஒருவன் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அங்குராவதொட்ட பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காணாமல்போன சிறுவனைத் தேடும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் சிறிபாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசியல் தீர்வுக்கு...

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வை காண்பதற்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. எனவே அரசாங்கம் அறிவிக்கவுள்ள நல்லிணக்க திட்டத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பை பெற ஆலோசிக்கப்பட்டுள்ளது என அரச உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் எதிர்வரும் அமர்வில் இலங்கைக்கு பாதகமான நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் இந்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தாகவும் தெரியவருகிறது.

தற்போதைய அரசு பதவியேற்றது முதல் இதுவரை தமிழ்த் தரப்புகளுடன் எந்தப் பேச்சுகளையும் நடத்தவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்மா அதிபர்...

நாட்டின் பொலிஸ்மா அதிபர் பதவியை, கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் வழங்கவேண்டும் என்று 'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் பிரதானி கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், "பேராயரின் சில செயற்பாடுகளைப் பார்க்கும்போது அவர் அதிகாரபூர்வமற்ற பொலிஸ்மா அதிபராகச் செயற்படுவதாகவே தென்படுகின்றது.

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்ட சம்பவம் ஒரு சாதாரண விடயம் அல்ல. இந்த நாட்டில் விசாரணை நடத்தப்படும் முறையொன்று உள்ளது. ரஞ்சித் ஆண்டகை தனது சமூகத்தின் சார்பில் குரல் கொடுக்க வேண்டும் என்பதில் பிரச்சினையில்லை. ஆனால் பொலிஸ்மா அதிபரை அவர் விமர்சனம் செய்திருந்தார். அவ்வாறானால் பொலிஸ்மா அதிபர் பதவியை ஜனாதிபதி பேராயரிடம் வழங்குவதே பொருத்தமானது" - என்றார்.

## தடையில்லா எரிபொருள்...

போக்குவரத்து மற்றும் மின்சாரம் ஆகிய இரண்டு துறைகளுக்கும் தடையில்லா எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்வதற்காக மத்திய வங்கியிடம், பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து இந்தக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் சமர்ப்பித்துள்ள திட்டத்தில், பெற்றோல், டீசல் மற்றும் மசகு எண்ணெய் தேவையான அளவுகளை விவரித்துள்ளது மற்றும் தடையின்றி விநியோகத்தை பராமரிக்க இறக்குமதிகள் தேவைப்படும் என்று கூறியுள்ளது.

அதன்படி, ஒரு மாதத்திற்கு 90,000 மெட்ரிக் தொன் பெற்றோல், 150,000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 90,000 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் தேவைப்படும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் பரிந்துரைத்துள்ளது.

எரிபொருளை முறையாக வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் உரிய காலத்தில் நிதி கிடைக்க வழிவகை செய்வது குறித்து இந்த உயர் மட்டக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அடுத்த இரண்டு மாதங்களுக்கு எரிபொருள் விநியோகத்திற்காக நிதி வழங்குமாறு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலிடம் பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

## வெளிநாட்டவர்...

வெளிநாட்டு பயணிகளுக்கு சோதனைகளை மேற்கொள்வது நாட்டிற்கு சுமையாக மாறியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்த பலர் பாதிக்கப்பட்டிருப்பது நாட்டிலிருந்து அவர்கள் வெளியேறும்போதே தெரியவருகின்றது என குறிப்பிட்டுள்ள அவர், இதன் மூலம் ஓமிக்ரோனால் பாதிக்கப்பட்ட பலர் நாட்டிற்குள் நுழைகின்றனர் என்ற முடிவிற்கு வரமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனை தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஆனால், அரசாங்கம் நாட்டிற்குள் நுழைபவர்களை சோதனையிடுவதை நிறுத்தியுள்ளது எனவும் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

இதனால் எதிர்காலத்தில் மிகவும் கடினமான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிவாயு சிலிண்டர்...

இதேவேளை, சிறிய அளவிலான வர்த்தக நிலையங்களுக்கும் அடுத்த வாரத்தில் இருந்து தட்டுப்பாடின்றி எரிவாயு விநியோகிக்கப்படும் என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நாளாந்த எரிவாயு சிலிண்டர்களுக்கான கேள்வி சுமார் இரண்டு இலட்சமாகக் காணப்பட்டது.

எனினும், தற்போது அந்த எண்ணிக்கை 90 ஆயிரமாக காணப்படுகின்றது. இதன்படி, நிறுவனம் தற்போது நாளாந்தம் 90 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கின்றது.

எனினும், இரண்டரைக் கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர்களைப் பகிர்ந்தளிப்பதில் சிறு தாமதம் நிலவுவதாகவும் லிட்ரோ கேஸ் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.


கொழும்பு 01 முதல் 15 வரையிலான பகுதிகளில் தமிழன் (தினசரி, வாரஇதழ்), ஜூனியர் பத்திரிகை வீடுகளுக்கே விநியோகம் செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கலாம்
அழையுங்கள்
0761393805

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில் வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்

# இன்றைய ராசி பலன்

**17.01.2022 திங்கட்கிழமை தை 04**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: புனர்பூசம்**
அ.கா 2.09 - 18.01.2022
அதிகாலை 4.37 வரை

**விஷ்கம்பம்**
மாலை 3.53 - 18.01.2022
மாலை 4.09 வரை

**யோகம்: வைதிருதி**
மாலை 3.53 வரை

**திதி: பௌர்ணமி**
அ.கா 3.18 - 18.01.2022
அதிகாலை 5.17 வரை

**முற்கரணம்: பத்திரை**
அ.கா 3.18 - மாலை 4.21

**பிற்கரணம்: பவம்**
மாலை 4.21 - 18.01.2022
அதிகாலை 5.17 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.28 - 7.55
மாலை 5.10 - 6.14

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை 7.56 - 9.24

**குளிகை காலம்**
பிற்பகல் 1.49 - 3.17

**எமகண்ட காலம்**
காலை 10.52 - பி.ப 12.2

**துர் முகூர்த்தம்**
பிற்பகல் 12.44 - 1.31
பிற்பகல் 3.06 - 3.53

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** சகோதரர்களுடன் உறவுகள் வலுப்படும்.வேலைத் தளத்தில் சம்பள உயர்வு கிடைக்கலாம். சில தனிப்பட்ட பிரச்சினைகள் நீங்கத் தொடங்கும். சில உறவுகளின் மூலம் சுப செய்திகள் கிடைக்கக்கூடும்.

**ரிஷபம்:** காணி/வீடு சொத்து சம்பந்தப்பட்ட விடயங்களில் இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். பணியிட சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பங்குச்சந்தை முதலீடு சிறந்த நன்மை தரலாம். உங்கள் நிர்வாகத் திறன் மேம்படும்.

**மிதுனம்:** புதிய தொழில் தொடங்குவதில் அதிர்ஷ்டம் நன்மை தரும். உங்கள் புத்திகூர்மையால் சில பிரச்சினைகள் நீங்கலாம். இன்று வணிகக் கடன் வாங்குவதை தவிர்ப்பது நன்மை. உங்கள் பணித் திறமைக்கு முதலாளியின் பாராட்டு கிடைக்கலாம்.

**கடகம்:** காதலர்கள் உறவில் நல்ல நிலை தோன்றலாம். மன அமைதியின்மையை இறை தியானத்தால் கட்டுப்பாட்டில் வைப்பது நல்லது. உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். பணிகளில் உழைப்பு தேவைப்படலாம்.

**சிம்மம்:** பிள்ளைகளுடன் இன்றைய நாள் இனிமையாக இருக்கலாம். வெளிநாட்டு பண வருவாய் கிடைக்கலாம். வாழ்க்கைத்துணையால் நன்மைகள் கிடைக்கலாம். உங்கள் செல்வாக்கு மேம்படலாம்.

**கன்னி:** சமூகத்தில் உங்கள் ஆளுமையின் பிம்பம் உயரலாம். அரசாங்க பணிகளில் இருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கலாம். பணிகளில் சக ஊழியர்களுடனான உறவில் நல்ல நிலை தோன்றலாம். வீட்டை விட்டு தூரத்தில் பணி செய்பவர்களின் வருவாய் அதிகரிக்கலாம்.

**துலாம்:** தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கத் தொடங்கும். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் நன்மை கிடைக்கப் பெறலாம். தொழில் முறை விடயங்களுக்கு சாதகமான நல்ல நாள். தொழில் பயணம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** தேவையற்ற செலவு மற்றும் கோபத்தை தவிர்ப்பது நன்மை. உடலில் வலி பிரச்சினை சிறிய அளவில் உண்டாகலாம். புதிய வணிகத் திட்டத்தை இன்று தவிர்ப்பது நன்மை. சில உறவுகளில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். இறைவணக்கம் தேவை.
**சந்திராஷ்டமம்: கேட்டை நட்சத்திரத்திற்கு இரவு 10.02 வரை**

**தனுசு:** சுபச் செய்திகள் கிடைக்கலாம். தகவல் சேகரிப்பதில் ஆர்வம் உண்டாகலாம். திருமணத்திற்கான சுப மங்கள செய்திகள் கிடைக்கலாம். வேலைத்தளங்களில் உங்கள் மீது ஈர்ப்பு உண்டாகலாம். சமூகத்தில் உங்கள் ஆதிக்கம் மேம்படும்.

**மகரம்:** இன்று உங்கள் வேலையை பிறரிடம் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சளிப் பிரச்சினை சிறிய அளவில் உண்டாகலாம். தொழில் மற்றும் வேலைக்கான கடன் பெறும் நிலை உண்டாகலாம். சில உறவுகளில் சிறிய இடைவெளியை அனுபவிக்கும் நிலை உருவாகலாம். இறை தியானம் நன்மை.

**கும்பம்:** தரகு தொழில் வருவாய் உண்டாகலாம். பணிகளில் இன்று மகிழ்ச்சி தரும் நல்ல நாளாக அமையலாம். பிள்ளைகளின் தொழில் வெற்றிகள் மகிழ்ச்சி தரலாம். சிலருக்கு நட்பு காதலாக உருவாகலாம்.

**மீனம்:** வேலைத்தளத்தில் பணிகளின் உயர்தரத்தை மாற்ற வேண்டாம். சில உறவுகளுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். உங்கள் நலம் விரும்புபவர்களின் ஆலோசனை பலன் தரும். மேலதிகமான செலவுகளிலும் கவனம் தேவைப்படலாம்.

# செல்வாக்கு நாளுக்குநாள் சரிவதால் இன, மதவாதத்தை தூண்ட அரசு முயற்சி

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

இந்த அரசாங்கத்தின் செல்வாக்கு நாளுக்கு நாள் சரிந்து வருகின்றது. மதவாதத்தை, இனவாதத்தை, சமூகங்களுக்கிடையில் வெறுப்புணர்வை தூண்டி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், மீண்டும் ஒருமுறை சந்தேகத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் நோக்கிலேயே செயற்பட்டு வருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது ஆட்சியில் 2015-2019 காலப்பகுதியில் 80 வீதம் பூர்த்தி செய்யப்பட்ட மீரிகம அதிவேக நெடுஞ்சாலையை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி திறந்து வைத்தார். ஜனாதிபதி அதில் ஆவேசமாக பேசினார். அந்த பேச்சில் ஒரு கடும் தொனி இருந்தது. கோபமாக பேசுனார். அவர் ஆட்சியில் இருக்கும் போது அவரே ஏன் இப்படி ஆவேசமாகப் பேசினார் என்பது எமக்குப் புரியவில்லை. ஆனால் இப்போது அவரை விட இந்நாட்டு மக்களே அதிக கோபத்தில் உள்ளனர். ஜனாதிபதிக்கு நான் சொல்ல விரும்புவது, அவர் ஆவேசமாக பேச வேண்டிய அவசியமில்லை. இரண்டு வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தவர் அவர்.

அவருக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் 19ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு 20ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். குறுகிய இரண்டு வருடங்கள் அவரே ஆட்சி செய்தார். பயணம் தோல்வியடைந்ததால், இன்று கேஸ், பால் மாவுக்கு மக்கள் வரிசையில் நிற்கின்றனர். அத்துடன் பொருட்களின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஒருவேளை உண்ண முடியாத நிலையிலும், வருமான மூலங்கள் இழந்து தங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து சலுகைகளையும் துண்டித்துள்ளமை தொடர்பில் மக்கள் ஜனாதிபதி மீது கடும் கோபத்தில் உள்ளனர். எனவே ஜனாதிபதி ஆவேசமாக பேசுவதில் அர்த்தமில்லை.

நாங்கள் யாரும் அவருக்கு தவறு செய்யவில்லை. இந்த நாட்டு மக்கள் அவருக்கு எந்த தவறும் செய்யவில்லை. மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தனர். அவர் அவ்வப்போது சிங்கப்பூர் சென்று மருந்து வாங்கி வருவதால் உடல் நலம், உடல் ஆரோக்கியம் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்கிறோம். அவர் மிகுந்த மன உளைச்சலில் இருந்ததையே உரையில் காண முடிந்தது. பதவிக்காலம் தோல்வியடைந்ததையே ஆவேச பேச்சில்



நான் ஜனாதிபதியிடம் கண்டேன்.

வாயுக் கலவை அழிவினால் நாட்டில் 7 மரணங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கேஸ் சிலிண்டர்கள் தொடர்பான விபத்துகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பான எந்தவித விசாரணைகளும் இல்லை. சி.ஐ.டிக்கு பல முறைப்பாடுகள் வந்தாலும் சி.ஐ.டி வாக்கு மூலம் கோர அழைத்தும் எரிவாயு நிறுவன அதிகாரிகள் இதுவரை சமுகமளிக்கவில்லை.

எவ்வாறாயினும், கடந்த வாரத்திற்கு முன் வாரம் கம்பஹா பிரதேசத்தில் இயந்திர கோளாறு காரணமாக நாட்டில் தனியார் விமானம் விபத்துக்குள்ளானதைக் கண்டோம். விபத்துக்குள்ளான 24 மணி நேரத்திற்குள், தனியார் விமான நிறுவனத்தின் இரண்டு அதிகாரிகளை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த விமானம் தொடர்பான உண்மைகள் மற்றும் பறக்கும் போது ஏற்பட்ட பிழைகள் குறித்து அதிகாரிகள் தேவையான நடவடிக்கை எடுக்காததே வேறு எந்த காரணத்திற்காகவும் இல்லை. அதனால் தான் அவர்கள் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் எரிவாயு நிறுவனமான லிட்ரோ மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறோம். அது ஒரு பெரிய பிரச்சினை. தனியார் விமான நிறுவனங்களுக்கு முடிவு செய்தது போல் லிட்ரோவிற்கும் முடிவெடுக்க தயங்க வேண்டாம்.

எரிவாயு கலவைக்கு பின்னால் அரசியல் பிரமுகர்கள் உள்ளனர். ஜனவரி மாதத்திற்குள் எரிவாயு பற்றாக்குறையை சரி செய்ய முடியும் என்றும் லிட்ரோ தெரிவித்துள்ளது. ஜனாதிபதி கடந்த வியாழன் அன்று லிட்ரோவிற்கு விஜயம் செய்ததால் அன்றைய தினம் எரிவாயு சிலிண்டர் சந்தைக்கு வரவில்லை. கடந்த 15ஆம் திகதி சிறிதளவு வெளியிடப்பட்டாலும் இன்னும் எரிவாயு சந்தையில் இல்லை. இறக்குமதி செய்ய டொலர்கள் இல்லை. அப்படி இருந்தும் இந்த அரசாங்கம் ஏன் மக்களை சங்கடப்படுத்துவதற்கு அதிகமாக செயற்படுகின்றது என்பதை ஜனாதிபதியால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி யார் மீது போர் பிரகடனம் செய்தார்?. லிட்ரோ நிறுவனத்திற்கே அவர் பேச வேண்டும்.

பொரளையில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் அண்மையில் கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டது. பிரச்சினை என்னவென்றால், ஈஸ்டர் குண்டு வெடிப்பு எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது இடம்பெற்றது. அந்தத் தாக்குதல் தொடர்பில் சமூகத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றது. அன்று வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அரசாங்கம் தற்போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குக் காரணமானவர்களை பிடிக்கும் நிலையில் உள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சஹ்ரான் கும்பல் படுகொலை செய்யப்பட்டு ஆயிரம் நாட்கள் கடந்துள்ள நிலையில், சஹ்ரான் கும்பலின் தாக்குதலின் பிரதான சந்தேக நபரான புலஸ்தினி மகேந்திரன் எனும் சாரா ஜஸ்மினைப் பிடிக்க அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சாரா இன்னும் உயிருடன் இருக்கிறார் என்ற விடயம் தெளிவாக கூறப்படுகிறது. அவரை கைது செய்ய பொலிஸும் அரசாங்கமும் பிடியாணை பிறப்பித்துள்ளதா? அவர் நாட்டில் இல்லை என தகவல் வெளியாகியுள்ளது. அவர் இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உதவியவர்கள் இன்னும் சேவையில் உள்ளனர். இதுபோன்ற பல கதைகள் சமூகத்தில் உள்ளன. சாராவை பிடிக்க முடிந்தால் அவருக்கு உதவிய, பக்கபலமாக நின்று கை கொடுத்தவர்கள் தொடர்பான விபரங்கள் வெளிவரும். வெடிகுண்டுகளை, ஆயுதங்களை வைத்திருக்க கற்றுக்கொடுத்தவர்களை எல்லாம் கண்டுபிடிக்கலாம். ஆனால், அவரை பிடிப்பதற்கான செயல்முறை மிகவும் மெதுவாக நடப்பதைக் காணலாம்.

இந் நாட்டில் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைவரின் புகைப்படங்களும் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் இருந்ததை நாம் அறிவோம். ஆனால், சாராவின் புகைப்படம் எந்த விளம்பரத்திலும் வைக்கப்படவில்லை. ஏனென்று எனக்கு தெரியாது. இந்தியாவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா அல்லது பிற பேச்சுவார்த்தைகள் உள்ளதா என்பது எங்களுக்குத் தெரியாது. இந்த அரசாங்கத்தின் செல்வாக்கு நாளுக்கு நாள் சரிந்து வருகின்றது. மதவாதத்தை, இனவாதத்தை, சமூகங்களுக்கிடையில் வெறுப்புணர்வை தூண்டி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், மீண்டும் ஒருமுறை சந்தேகத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் நோக்கிலேயே செயற்படுகிறது. தேவாலய சம்பவத்தில் ஈடுபட்டவர் இதனை செய்துள்ளார். இதன் பின்னணியில் உள்ள உண்மையான குற்றவாளி யார் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது - என்று தெரிவித்தார்.

# கோட்டா தலைமையிலான அரசாங்கம் முழு நாட்டுக்கும் சாபக்கேடு

## திகாம்பரம் எம்.பி. நுவரெலியாவில் ஆவேசம்



**(க.கிஷாந்தன்)**

தாத்தாவும் அப்பாவும் எமது மக்களை ஏமாற்றியதுபோல பேரனும் இப்போது ஏமாற்றி வருகின்றார். நான் அமைச்சராக இருந்தபோது நிர்மாணித்த வீடுகளின் சாவிகளை பலவந்தமாக பெற்று அதனை மக்களுக்கு மீள வழங்கும் அரசியலே முன்னெடுக்கப்படுகின்றது. - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மலையக பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (16) நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் தைப்பொங்கல் விழா வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,


நல்லாட்சியே மலையகத்துக்கு பொன்னான காலம். அக்காலத்தில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் மலையகத்துக்கு மட்டுமல்ல முழு இலங்கைக்குமே சாபக்கேடாகும். மக்களுக்கு பல பிரச்சினைகள். பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

கூட்டு ஒப்பந்தம் இருந்தால்தான் மலையக மக்களின் பிரச்சினை தீருமென சிலர் கொக்கரித்து வருகின்றனர். தாத்தா, அப்பா ஏமாற்றியதுபோல பேரனும் எமது மக்களை ஏமாற்ற முற்படுகின்றார். அதனால்தான் நாங்கள் கட்டிய வீடுகளுக்கு திறப்பு விழா நடத்துகிறார். அதுவும் சாவிகளை பலவந்தமாக பறித்தெடுத்து மீள வழங்கப்படுகின்றது.

எமது மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். அவர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கப்படுவார்கள் என்ற உறுதிமொழியை வருங்கால ஜனாதிபதி சஜித் பிரேமதாச மீண்டும் வழங்கியுள்ளார். இந்த ஆட்சியின்கீழ் எமது மக்களுக்கு நன்மை பயக்கவில்லை. புதிய ஆட்சியின்கீழ் மலையக மக்களுக்கு எல்லாவற்றையும் பெற்றுக்கொடுப்போம் - என்றார்.

# உப்புவெளியில் வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டு

## திருடர்களுக்கு பொலிஸார் வலைவீச்சு





**(ரவ்பீக் பாயிஸ், பதுர்தீன் சியானா)**

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - கண்டி பிரதான வீதி ஆண்டாங்குளம் பகுதியில் வர்த்தக நிலையம் சூட்சுமமான முறையில் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (16) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வர்த்தக நிலையத்தை சுற்றி பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட இரும்பு கம்பி வலை வெட்டப்பட்டு கதவும் உடைக்கப்பட்டு கள்வர்கள் உள்நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலையத்தில் சிகரெட் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாகவும் கடை உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் மற்றும் கைரேகை நிபுணர்களின் உதவியுடன் தரவுகள் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் உப்புவெளி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகரை குஞ்சங்கல் குளத்தில் ஆதிவாசிகளின் பொங்கல் விழா







**(வாழைச்சேனை நிருபர்)**

ஆதிவாசிகளின் பொங்கல் விழா நேற்று (16) வாகரை குஞ்சங்கல் குளத்தில் அவர்களுக்குரிய கலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்றது.

ஆதிவாசிகளின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதேச மக்கள் பங்குகொண்டு தங்களது கலாசார ரீதியில் மண்பானையில் பொங்கல் இட்டு சூரிய பகவானுக்கு நன்றி தெரிவித்தனர்.

இதன்போது சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான மரபு ரீதியான விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்று, போட்டி நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

நீண்ட காலத்திற்குப் பின்னர் மேற்படி கிராம மக்கள் இவ் பொங்கல் விழாவினை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். குறித்த நிகழ்வினை லவன் உதவும் கரங்கள் நற்பணி மண்றத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந் நிகழ்வில் கலந்துகொண்ட அமைப்பின் தலைவர் குருசுமுத்து வி.லவன் உரையாற்றும் போது, ஆதிவாசிகள் எமது இனத்தின் மூத்த தமிழ் குடிமக்களாவர். இப் பகுதிகளில் இருந்து 3000 வருடங்களுக்கு முன்பு மன்னர் காலத்தின் அரச படைகளில் போர் வீரர்களாக இருந்துள்ளனர்.. எனவே, இவர்கள் எம்மவர்களால் போற்றப்படவேண்டும். இவர்களது கலாசாரங்களும் பண்பாடுகளும் எம்மால் பாதுகாக்கப்படவேண்டும் என்றார்.

# பலாங்கொடை, மாவனெல்லை ஆகிய சபைகளின் தலைவர்கள் பதவிநீக்கம்

பலாங்கொடை நகரசபையின் தலைவர் மற்றும் மாவனெல்லை பிரதேசசபை தலைவர் ஆகியோர் அவர்களின் பதவிகளிலிருந்து, உடன் அமுலுக்கு வரும் வகையில் சப்ரகமுவ ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவர்கள் இருவராலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரவு - செலவுத் திட்டங்கள் தோல்வியடைந்தமையினால் , சப்ரகமுவ ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இவர்கள் இருவரும் அவர்களின் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை நகரசபையின் தலைவர் சாமிக ஜயமினி வெவேகெதர மற்றும் மாவனெல்லை பிரதேச சபையின் தலைவர் சந்தன குமார ஜயவர்தன ஆகியோரே இவ்வாறு பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பான வர்த்தமானி அறிக்கை நேற்று முன்தினம் (15) வெளியிடப்பட்டுள்ளது.








வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் முதல் தடவையாக பட்டப்போட்டி நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காட்டிலேயே இப் போட்டிகள் இடம்பெற்றன. வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட மற்றும் பிரதேசத்துக்கு வெளியே என இரு பிரிவுகளாக இப் போட்டிகள் இடம் பெற்றன. (படங்கள்: யாழ். நிருபர்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 17ஆம் திகதி, திங்கட்கிழமை

# வட கொரியாவின் தொடர் ஏவுகணை சோதனைகள்

வட கொரியாவின் தொடர் ஏவுகணை சோதனைகளையடுத்து, அந்நாட்டு அதிகாரிகள் ஐவருக்கு அமெரிக்கா தடைவிதித்த நிலையில், அதற்கு எதிர்வினையாற்றும் வகையில் மேலும் இரு ஏவுகணைகளை ஏவி வட கொரியா சோதனை நடத்தியுள்ளது.

வட கொரியா இவ்வாறு சோதனை செய்ததை தென் கொரியா உறுதிப்படுத்தியுள்ளது. வட கொரியாவின் வடக்கு பியாங்கன் மாகாணத்திலிருந்து இரு ஏவுகணைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஏவி சோதிக்கப்பட்டன.

11 நிமிடங்கள் இடைவெளியில் அந்த ஏவுகணைகள் செலுத்தப்பட்டன என தென் கொரிய முப்படை தலைமையகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக 36 கி.மீ. உயரத்துக்குச் சென்ற அந்த ஏவுகணைகள் 430 கி.மீ. பாய்ந்து சென்று கடலில் விழுந்தன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்களது அணு ஆயுதங்களைக் கைவிடுவதாக வட கொரியத் தலைவர் கிம் ஜோங்உன் கடந்த 2019ஆம் ஆண்டு தொடக்கத்தில் அறிவித்தார். அதற்குப் பதிலாக தங்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்று அவர் அமெரிக்காவிடம் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன. வட கொரியா தங்களது அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிட்ட பிறகுதான் பொருளாதாரத் தடைகளை நீக்க முடியுமென ட்ரம்ப் திட்டவட்டமாகக் கூறிவிட்டதால் இரு தரப்பினருக்குமிடையிலான பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவிடம் ஒப்புக்கொண்டதை மீறி மீண்டும் அணு ஆயுதத் திட்டங்களைத் தொடங்கப் போவதாக வட கொரியா மிரட்டல் விடுத்து வந்தது. மேலும், அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் எதிர்ப்பை மீறி அந்நாடு அடிக்கடி ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, ஒலியை விட 5 மடங்கு வேகமாகச் சென்று நீண்ட தூர இலக்குகளை துல்லியமாகத் தாக்கவல்ல ஹைப்பர்சொனிக் ஏவுகணையை மூன்றாவது முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை வட கொரியா பரிசோதனை செய்தது.

அதனைக் கண்டிக்கும் வகையில் வட கொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அதற்குப் பதிலடியாகவே வட கொரியா தற்போது மேலும் இரு ஏவுகணைகளை பரிசோதனை செய்துள்ளதாகக் கருதப்படுகிறது.

வடகொரியாவை பொறுத்தவரை அப்பிராந்தியத்தில் தனது இராணுவ பலத்தை வலுப்படுத்துவதோடு, எதிரிகளுக்கு நெருக்கடி கொடுப்பதும், அவர்களின் இலக்குகளை அடையவிடாது தடுப்பதும் மற்றும் புவிசார் பூகோள அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்துவதும் அடிப்படை உத்தியாகத் தெரிகிறது. ஏறக்குறைய தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளின் அனைத்து நகர்வுகளையும் வடகொரியா கண்காணிக்கின்றது என்பதுவே இந்நடவடிக்கையின் சாரம்சமாகும்.

வடகொரியாவின் தொடர் ஏவுகணைப் பரிசோதனை அதன் மீதான பொருளாதாரத் தடைக்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது. அதனைப்பற்றிய உரையாடல்கள் ஐக்கிய நாடுகள் சபையில் ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளாலும், மேற்கு நாடுகளாலும் உரையாடப்படுகிறது. அதன் விளைவுகள் வடகொரிய மக்களின் இருப்பிலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளுகின்ற சூழலை ஏற்படுத்தக்கூடியது. உணவுக்கான தட்டுப்பாடு என்பது கொவிட் தொற்றுக்கு பின்னால் உலகளாவிய ரீதியில் அதிகரித்துவரும் சூழலில் ஓர் அபாயமான கட்டத்தை வடகொரியா நெருங்குகின்றது.

வடகொரியா, அணு ஆயுத அரசியலினூடாகவே கடந்த காலங்களிலும் தனது அரசியல் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறானதொரு மரபிலேயே இம்முறையும் ஒரு ஏவுகணை நடவடிக்கையூடாக தனது பிராந்திய முரண்பாட்டு தரப்புகளான தென்கொரியா மற்றும் ஜப்பானுக்கு எச்சரிக்கை அரசியலை வடகொரியா மேற்கொண்டுள்ளது என்பதையே விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

கொவிட் தொற்றுக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் நாடுகளில் வடகொரியாவும் ஒன்றுதான். அதனால்தான் சில வாரங்களுக்கு முன்னர் உணவுக்கட்டுப்பாடு மேற்கொள்ள அங்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால், இந்த சிரமமான சூழ்நிலையிலும் ஏவுகணைப் பரிசோதனைகளை வடகொரியா செய்வதானது வலிந்த போர் ஒன்றுக்கான கட்டியமேயாகும். ஆயுதபலம் இருந்தால்தான் உலகில் கெத்தாக இருக்கலாமென வடகொரியா நினைக்கக்கூடும். ஆனால், அழிவுப்பொருட்களைத் தயாரிப்பதில் என்ன பெருமை இருக்கிறது?அது ஒரு நாளைக்கு அழிவையே பெற்றுத்தரமாட்டாதா? வரலாறுகளை திரும்பிப் பார்க்க வேண்டும். வடகொரியா ஏதோ பெரும் ஆபத்துக்கு வித்திடுகிறது.



# முதுமையில் இயலாமையின்றி நலமாய் வாழ

முதுமையில் வறுமை கொடியது, தனிமை கொடியது, பல நோய்கள் கொடியவை என்பது தெரிந்ததே. ஆனால், இவை எல்லாவற்றையும்விட மிகவும் கொடியது என்ன தெரியுமா? அதுதான் முதுமையில் இயலாமை. அதாவது, வயதான காலத்தில் தனது தேவைகளுக்காக மற்றவர்களை சார்ந்திருப்பது.

உதாரணம்: குளிப்பதற்கு, உடை உடுத்துவதற்கு, சாப்பிடுவதற்கு, நடப்பதற்கு இப்படித் தன்னுடைய ஒவ்வொரு தேவைக்கும் மற்றவர்களைச் சார்ந்திருப்பதுதான் மிகவும் கொடுமையானது. தனக்குத் தேவைப்படும்போதெல்லாம் உதவ ஒருவர் முன்வர வேண்டும். அவர் மனம் கோணாமல் இருக்க வேண்டும். இதற்கு உற்ற துணை அல்லது உறவினர்களின் உதவி வேண்டும். தனக்கு உதவ ஆட்களை வைத்துக்கொள்வதென்றால், அதற்கேற்ற நிதி வசதி வேண்டும். இத்தனையும் அமைவது என்றால், அது சற்றுச் சிரமம்தான். ஆகவே, இந்த இயலாமையைத் தடுத்து, தன் சொந்தக் காலிலேயே ஒருவர் நிற்க ஏதாவது வழிகள் உண்டா?

பக்கவாதம், பார்க்கின்சன்ஸ் நோய், மூட்டுவலி, உடற்பருமன், சத்துணவுக் குறைவு, புற்றுநோய், பார்வைக் குறைவு, காது கேளாமை, ஆஸ்துமா, இதய பலவீனத்தால் மூச்சு விடுவதில் சிரமம், உடல் உறுப்புகளை இழத்தல் போன்ற உடல் நோய்களால் இயலாமை ஏற்படும். மனச்சோர்வு, மறதி நோய் எனும் டிமென்சியா போன்ற மனநோய்களாலும் இயலாமை ஏற்படும்.

### எந்த அளவுக்கு உதவி தேவைப்படும்?

இது அவரவருடைய இயலாமையைப் பொறுத்தே இருக்கும். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, பழையநிலைக்குத் திரும்பிய ஒருவருக்கு, நடக்கும்போது மட்டும் ஒருவர் துணை வேண்டும். அதே சமயம், பார்க்கின்சன்ஸ் (உதறுவாதம்) நோயால் பாதிக்கப்பட்டவருக்கு, அவருடைய அனைத்துத் தேவைகளையும் செய்ய ஒருவர் வேண்டும். இதைவிடச் சிரமம், மறதி நோயால் பாதிக்கப்பட்டவரின் நிலை. அவரைச் சிறு குழந்தையைப் பார்த்துக்கொள்வதுபோல எல்லா நேரங்களிலும் கூடவே இருந்து, அன்புடன் பராமரிக்க ஒருவர் தேவை. மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்குப் பேச்சுக்குத் துணையாக ஒருவர் இருந்தாலே போதும்.

### உறவினர்களின் நிலை

தொடர்ந்து படுத்துக் கிடக்கும் முதியவர்களைக் கவனித்துக்கொள்ளும் உறவினர்களின் நிலையைச் சற்று பார்ப்போம். முதலில் பெரியவர் விரைவில் குணமடைந்தால் போதும் என்று விழுந்து விழுந்து கவனிப்பார்கள். மருத்துவரையும் இயன்முறை சிகிச்சை நிபுணரையும் வீட்டுக்கே வரவழைத்து சிகிச்சை நடைபெறும். பெரியவரின் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால், கவனிப்பு சிறிது சிறிதாகக் குறையும்.

மருத்துவரிடம் தொலைபேசியிலேயே ஆலோசனை பெறப்படும். மருந்துகளின் விலை அதிகம் இருப்பதால், அவற்றில் பல குறைக்கப்படும். தொடர்ந்து பெரியவரைக் கவனித்துவரும் உறவினர்கள் உறக்கமின்மையால் உடல்நலம் பாதிக்கப்படுவார்கள். கணவன், மனைவி உறவும் சில நேரங்களில் பாதிக்கப்படக்கூடும். “பெரியவர் ஏன் இப்படிப் படுத்து அவதிப்படுகிறார்? இதற்கு ஒரேயடியாகப் போய்விட்டாலே போதும்!” என்று கூறவும் செய்வார்கள். என்றாவது ஒருநாள் இச்சொல் அவர் காதில் படும்போது, அவர் படும் மனவேதனையைச் சொல்லிமாளாது.

முதுமையில் இயலாமையின்றி வாழக் கீழ்க்கண்ட வழிமுறைகளை ஐம்பது வயதிலிருந்தே தவறாமல் கடைப்பிடித்துவர வேண்டும். வயதான காலத்தில் இயலாமை ஏற்படப் பல காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் முக்கியமானவை நோய்களே. எடுத்துக்காட்டாக வயதான காலத்தில் பார்வை குறைவதை முதுமையின் விளைவு என்றெண்ணி, ஆரம்பத்திலேயே மருத்துவரிடம் செல்வதில்லை. கண்ணில் ஏற்படும் குளுக்கோமா மற்றும் விழித்திரை பாதிப்பால் ஏற்படும் நோய்களால் பார்வை குறையும் என்பது தெரிவதில்லை. பார்வை குறைந்து முற்றிய நிலையில், அதற்குத் தக்க சிகிச்சை பெற்றும் பயனளிக்காத நிலையில், மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதேபோல்தான் காதுகேளாமையும்!

முதுமையில் ஏற்படும் இயலாமைக்கு நீரிழிவு நோயின் பங்கு மிகவும் உண்டு. வயதான காலத்தில் இந்நோய் எந்த அறிகுறியும் இல்லாமல் இருளில் ஒளிந்திருக்கும் திருடனைப் போல் மறைந்திருக்கும். விழித்திரை பாதிப்பு ஏற்பட்டு பார்வை குறையலாம் அல்லது பாதங்களுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்பட்டு, காலில் ஆறாத புண்கள் ஏற்பட்டுக் கால்களை இழக்க நேரிடலாம். ஆகையால், ஆண்டுக்கு ஒரு முறையாவது நீரிழிவு நோய் உள்ளவர்கள் கண் பாதுகாப்புக்கும், பாதப் பாதுகாப்புக்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று, நோயைக் கட்டுக்குள் வைத்திருந்தால் இந்நோயால் ஏற்படும் இயலாமை அகன்று நலமாக வாழலாம்.

உயர் இரத்த அழுத்தம் சிலருக்கு எவ்வித அறிகுறியும் இல்லாமலேயே மறைந்திருக்கும். வேறு ஏதாவது தொல்லைக்கு (எடுத்துக்காட்டாக, மூட்டுவலி) மருத்துவரிடம் செல்லும்போது உயர் இரத்த அழுத்தம் இருப்பது கண்டறியப்படும். மருத்துவரின் ஆலோசனைப்படி அதற்குத் தொடர்ந்து தக்க சிகிச்சை எடுத்து வர வேண்டும். உயர் இரத்த அழுத்தம் திடீரென்று அதிகரிக்கும்போது பக்கவாதம் ஏற்பட்டு ஒருவரைப் படுக்கையில் வீழ்த்திவிடும். பக்கவாதம் ஏற்பட்டு சுமார் 3 மணி நேரத்திற்குள்ளேயே தக்க சிகிச்சை எடுத்தால் நல்ல பலன் கிடைக்கும். காலம் தாழ்த்தினால் பக்கவாதத்தால் ஏற்படும் இயலாமையினால் ஆயுள் முழுவதும் காலத்தைக் கழிக்க வேண்டியிருக்கும். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும், தொடர்ந்து புகைபிடிப்பவர்களுக்கும் பக்கவாதம் வர வாய்ப்பு அதிகமுள்ளது.

பார்க்கின்சன்ஸ் நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அதற்குத் தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டும். இல்லையேல், சரியாகப் பேசவும், நடக்கவும் முடியாதநிலை ஏற்படலாம். ஆரம்ப நிலையில் இந்நோயின் தொல்லைகள் முதுமையின் விளைவு போலவே இருக்கும். சந்தேகமிருப்பின் துறை சார்ந்த சிறப்பு மருத்துவரை நாடி, தக்க சிகிச்சை எடுத்துக்கொண்டு இந்நோயினால் ஏற்படக்கூடிய இயலாமையிலிருந்து காத்துக்கொள்ளலாமே..!

மூட்டுவலி, முக்கியமாக முழங்கால் மற்றும் இடுப்பு வலிக்கு உடனே தக்க சிகிச்சை எடுத்துக்கொண்டால், வலியின்றி வாழலாம். உரிய சிகிச்சை பெறாமல் காலம் தாழ்த்திவிட்டால், மூட்டுவலி அதிகமாகி நடை குறைந்து படுக்கையில் கிடக்க வேண்டிய நிலை உண்டாகும். இதனால் நோயாளிக்கு மட்டுமல்ல, அவர்களைக் கவனித்துக்கொள்ளும் உறவினர்களுக்கும் சிரமங்கள் ஏற்படலாம்.

ஆண்டுக்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனை செய்துகொண்டு, நோய் இருப்பின் அதற்கு உரிய தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்வதன் மூலம் பல நோய்களின் விளைவாக ஏற்படும் இயலாமை இன்றி சொந்தக்காலில் நிற்கலாம். முதுமைப் பருவத்தில் வரும் பல நோய்களை விரட்டி இயலாமையின்றி வாழ உடற்பயிற்சி மிகவும் உதவும். நாள்தோறும் 3 முதல் 5 கி.மீ. தூரம் நடப்பது நல்லது. அத்துடன் 30 இலிருந்து 45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும். மனச்சோர்வு, மறதிநோய் போன்றவற்றால் ஏற்படும் இயலாமையைத் தினமும் செய்யும் தியானம் மற்றும் பிராணாயாமம் மூலம் தவிர்க்க முடியும்.

நிதி வசதியின்மை இயலாமைக்கு ஒரு முக்கிய காரணமாகிறது. வறுமையினால் தமது அன்றாடத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள, இளைஞர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. முதுமையில் தனித்து நிற்கப் பணம் மிகவும் அவசியம். இதற்கு நடுத்தர வயதிலிருந்தே முதுமைக் காலத்துக்காக ஒரு கட்டாய சேமிப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். வறுமையால் ஏற்படும் இயலாமையை இதன் மூலம் ஓரளவுக்குத் தடுக்க முடியும்.

வயதாகிவிட்டது, இனி தொல்லைகள் வருவது இயல்புதான் என்றெண்ண வேண்டாம். பல தொல்லைகளைத் தவிர்த்து இயலாமையின்றி நலமாக வாழ முடியும். இதற்குரிய முயற்சிகளை நடுத்தர வயதிலிருந்தே தொடங்க வேண்டும். கால முறைப்படி மருத்துவப் பரிசோதனை, தினமும் செய்யும் உடற்பயிற்சி, தடுப்பூசி போட்டுக்கொள்வது, தினமும் செய்யும் தியானம், பிராணாயாமம் ஆகியவற்றுடன் தேவையான நிதிவசதியையும் ஏற்படுத்திக்கொண்டால், முதுமையில் ஏற்படும் இயலாமையைக் கண்டிப்பாக விரட்ட முடியும். பிறர் உதவியின்றி சொந்தக்காலில் நிற்க முடியும்.

**- பத்மஸ்ரீ வி.எஸ்.நடராஜன்,**
*முதியோர் நல மருத்துவர்,*
*நன்றி - இந்து தமிழ்*

## இன்றைய நாளில்...

- 1362 – ஐரோப்பாவில் பிரித்தானியத் தீவுகள், நெதர்லாந்து, வடக்கு ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினால் 25,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- 1773 – கப்டன் ஜேம்ஸ் குக் அண்டார்க்டிக் வட்டத்தை அடைந்தார்.
- 1811 – எஸ்பானியாவின் சுமார் 6,000 படை வீரர்கள் 100,000 மெக்சிக்கோ புரட்சியாளர்களைத் தோற்கடித்தனர்.
- 1899 – பசிபிக் பெருங்கடல் பகுதியில் வேக் தீவை ஐக்கிய அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது.
- 1928 – லியோன் ட்ரொட்ஸ்கி மொஸ்கோவில் கைதுசெய்யப்பட்டார்.
- 1946 – ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை முதலாவது கூட்டத்தை நடத்தியது.
- 1961 – கொங்கோ ஜனநாயகக் குடியரசின் பிரதமர் பத்திரிசு லுமும்பா இராணுவப் புரட்சியின் பின் கைதுசெய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1981 – பிலிப்பைன்ஸில் 8 ஆண்டுகளுக்கும் மேலாக அமுலில் இருந்த இராணுவச் சட்டத்தை அரசுத் தலைவர் பேர்டினண்ட் மார்க்கோஸ் நீக்கினார்.
- 1991 – வளைகுடாப்போர் ஆரம்பமானது.
- 1992 – இரண்டாம் உலகப் போரின்போது கொரியப் பெண்களை பாலியல் அடிமைகளாக நடத்தியமைக்காக ஜப்பானியப் பிரதமர் கீச்சி மியாசாவா தென் கொரியாவில் மன்னிப்புக் கேட்டார்.
- 1995 – ஜப்பானின் கோபே நகரில் இடம்பெற்ற 7.3 ரிச்டர் நிலநடுக்கத்தில் 6,434 பேர் உயிரிழந்தனர்.
- 1998 – ஐக்கிய அமெரிக்கத் தலைவர் பில் கிளின்டன் தன்னைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக போலா ஜோன்ஸ் குற்றஞ்சாட்டினார்.
- 2010 – நைஜீரியாவில் முஸ்லிம், கிறிஸ்தவக் குழுக்களிடையே கலவரம் வெடித்ததில் 200 பேர் வரை உயிரிழந்தனர்.

## நக்கல் நமசிவாயம்


முன்னமெல்லாம் வீட்டுச் சாமான்கள் வாங்க லிஸ்ட் ஒண்டில யோசிச்சு யோசிச்சு சாமான்களை குறிப்பம்... இப்போ என்னெண்டா லிஸ்ட் போடவே யோசிக்கிறம்...



# சிங்களவர்கள் பொருளாதாரத் தடையை தற்போது உணர ஆரம்பித்துள்ளனர்!

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு









பொருளாதாரத் தடை என்பது தமிழர்களுக்கு புதிதான ஒரு விடயம் இல்லை. அந்த பொருளாதாரத் தடையை தற்போது தான் சிங்களவர்கள் உணர்கிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் நிகழ்வும் பாரம்பரிய தமிழர் விளையாட்டு நிகழ்வும் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தமிழர்களின் பாரம்பரியத்தினையும் பண்பாட்டினையும் நாங்கள் தான் பேணிவளர்க்க வேண்டும். நாங்கள் தான் அவற்றை கட்டிக்காக்க வேண்டும். நாங்கள் அதற்கான முதுகெலும்பாக செயற்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில் தான் இன்றைய நாள் ஒரு பண்பாட்டு நாளாக உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் முன்னெடுத்திருக்கிறது. மிக முக்கியமாக தமிழர்களிடமிருந்து அருகிப் போகின்ற போர்த்தேங்காய் உடைத்தல், தலையணைச்சமர், முட்டி உடைத்தல், கிளித்தட்டு போன்ற எங்களுடைய பண்பாட்டோடும் பாரம்பரியத்தோடும் தமிழரோடும் பிறந்து வளர்ந்த அவர்களுடைய கலாசாரத்தோடு இயல்படையக் கூடிய இந்த நிகழ்வுகள் எங்களை விட்டு விலகிச் செல்கின்றன. அவ்வாறு விலகிச் செல்லுகின்ற இந்த விளையாட்டுகளை மீண்டும் நினைவூட்டுகின்ற வகையில் பண்பாட்டு விழாவாக தமிழர்களுடைய திருநாளான தைப்பொங்கலை மையமாக வைத்து நீங்கள் முன்னெடுத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியானது.

இங்கே வருகின்றபோது பார்த்தேன் நெற்கதிர்கள் பூத்துக்குலுங்க இந்த மண்டபம் மேடையை அலங்கரித்திருக்கிறீர்கள். எங்கள் மக்களுடைய வரலாற்றிலே நாம் நெல்லோடும் இந்த நெல்லின் வாழ்வோடும் வாழ்ந்தவர்கள். இம்முறை விவசாயிகளுக்கான பசளைகள் தடை செய்யப்பட்ட காரணத்தால் விவசாயிகளின் அறுவடை என்பது மிகப் பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு ஏக்கரில் 8 அல்லது ஒன்பது பை நெல் மூடைகளை அறுவடை செய்கின்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. ஆனால் அரசாங்கம் இப்போது மியன்மாரில் இருந்தும் வேறு நாடுகளில் இருந்தும் எத்தனையோ இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்யத் தயாராக இருக்கிறது. இவ்வாறு அங்கு இரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட அரிசிகளை இறக்குமதி செய்ய முனைகிறார்கள். இங்கு விவசாயம் செய்பவர்களுக்கு உரத்தை பயன்படுத்த அரசு தடை விதித்திருக்கிறது. அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கிலே அறுவடை செய்கின்ற காலத்தில் இலங்கையில் ஏனைய பகுதிகளில் சிலவற்றில் இனித்தான் விதைப்பு ஆரம்பமாக இருக்கின்றது. வடக்கு கிழக்கில் விவசாயிகள் நெல் அறுவடை செய்கின்ற காலத்தில் இந்த அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து அரிசியினை இறக்குமதி செய்வது மேலும் எமது மக்களை துன்பத்துக்கு உள்ளாக்கும்.

ஆனால் நாம் கடும் நெருக்கடியோடு வாழ்ந்தவர்கள். ஒரு கால கட்டத்தில் 90களில் இலங்கையில் மண்ணெண்ணெய் 12 ரூபாவுக்கு விற்றபோது, நாம் 300 ரூபாவுக்கு வாங்கியவர்கள். அப்போது யூரியாவை கண்ணால் காணவில்லை. உடுப்பு துவைப்பதற்கு சவர்க்காரங்களைக் காணவில்லை. நாங்கள் இந்த மண்ணிலே பெற்றோலை கண்டிருந்ததில்லை. சீமெந்துகளை, கம்பிகளை கண்டிருந்ததில்லை. அவ்வாறிருந்தும் இந்த மண்ணிலே நாங்கள் வாழ்ந்திருந்தோம். எங்களுடைய வாழ்க்கை நகர்ந்திருந்தது. அதனை இப்போது தான் சிங்கள மக்கள் படிக்கவும் உணரவும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, பொருளாதாரத் தடை என்பதும் பொருளாதாரத்தின் மீதான ஒரு வகையான ஆக்கிரமிப்பு என்பதும் இப்போதுதான் சிங்கள மக்களை உணர வைத்திருக்கிறது. தமிழர்கள் ஏற்கனவே இவற்றை நேரடியாக அனுபவித்து வாழ்ந்தவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினருடன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் கணேசலிங்கன், பாடசாலைகளின் அதிபர்கள், கிராம அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தலதா மாளிகைக்கு பிரதமர் விஜயம்





கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (16) அங்கு வழிபாட்டில் ஈடுபட்டு ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

தலதா மாளிகைக்கு விஜயம் செய்த பிரதமர் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெலவினால் வரவேற்கப்பட்டார். அதனை தொடர்ந்து பிரதமர், வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் மல்வத்து மஹா விகாரை பீட மஹாநாயக்கர் வணக்கத்திற்குரிய திப்படுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தேரர், பிரதமருக்கு புத்தர் சிலையொன்றை பரிசளித்தார்.

வழிபாட்டில் பிரதமருடன் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்தே, நாடாளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, குணதிலக ராஜபக்ஷ, உதயன சாமிந்த கிரிந்திகொட, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# அதிபர், ஆசிரியர் சேவைகள் தனிச் சேவைகளாக அறிவிப்பு

அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

இலங்கை அதிபர், ஆசிரியர் சேவைகள் தனியான சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதிபர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் சேவை ஆகியன தனியான சேவைகளாக அறிவிக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

2021 ஆகஸ்ட் 30ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் சேவை ஆகியன தனித்தனி சேவைகளாக செயற்படுவதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொலிஸார் இருவருக்கு கொரோனா தொற்று

மாரவில பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர் மற்றும் குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி மாரவில ஆதார வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையிலேயே இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான தலைமையக பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் உத்தியோகப்பூர்வ இல்லத்திலும், குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி மாரவில ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

# உயிரிழந்த நிலையில் இரு ஆமைகள் மீட்பு



(ஜூட் சமந்த)

உயிரிழந்த நிலையில் இரு ஆமைகள், சிலாபம் கடற்கரை பிரதேசத்தில் கரையொதுங்கியிருந்த நிலையில் பிரதேச மக்களால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (15) மாலை இவ்விரு ஆமைகள் உயிரிழந்த நிலையில் இவ்வாறு கரையொதுங்கியுள்ளன.

உயிரிழந்த ஆமைகளில் ஒன்று வலையில் சிக்கியதாலும், மற்றைய ஆமை மீனவர்களின் செயற்பாட்டினாலும் உயிரிழந்திருக்கலாம் என நம்புவதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்விரு ஆமைகளினதும் நிறை 50 தொடக்கம் 60 கிலோகிராம் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த ஆமைகளின் சடலங்கள் மேலதிக விசாரணைகளுக்காக ஆனவிழுந்தான் வன ஜீவராசிகள் காரியாலய அதிகாரிகளிடம் ஒப்படைக்க மீனவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




எம்.டி.வி.புகைப்படக் கலைஞர்கள் சங்கம் நடத்திய பரிசளிப்பு விழா நேற்று காலை கொழும்பு- 03, சசகாவா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, சங்கத்தின் பொருளாளர், ஜெ.ஓவியநாதனுக்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த புரவலர் ஹாசிம் உமர் விருது வழங்கி கௌரவிப்பதையும் அருகில் அமைப்பின் தலைவர் பாலன் மற்றும் செயலாளர் குணசேகரன், ஆலோசகர் எம்.நியாஸ் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நிர்மாணிக்கப்பட்டு வந்த வீடு இடிந்து விழுந்ததில் இருவர் காயம்



கிராண்ட்பாஸ், தொட்டலங்க பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வந்த இரண்டுமாடி வீடு நேற்று இடிந்து விழுந்ததில் இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டின் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்து வந்த நபரொருவர் மற்றும் அந்த வீட்டிலிருந்த 14 வயது சிறுமியுமே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்த நிலையில் இவர்கள் இருவரும் பிரதேச மக்களால் மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயங்களுக்குள்ளான இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காணாமல்போன நபர் சடலமாக மீட்பு

(கெலும் குணதிலக்க)



மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஹெரகல, கடோல்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் கடந்த 13ஆம் திகதி காணாமல் போயிருந்த நிலையில் அவர், நேற்று முன்தினம் (15) காட்டுப்பகுதியொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வை.எம்.பிரசன்ன சுகத் (வயது 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியாகியுள்ளதுடன் மீண்டும் வீட்டுக்கு வராததால் அவரின் மனைவி மொனராகலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மொனராகலை பொலிஸார், கிவுல்ஹார பிரதேசத்தில் காடொன்றில் வைத்து அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் இனந்தெரியாதவர்களினால் காட்டுப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளதுடன், வாகனமொன்றில் மோதியதால் அவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மொனராகலை மேலதிக நீதவான் ஆர்.எம். ஞானதிலகவினால் இந்த உயிரிழப்பு தொடர்பில் பிரேத பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளதுடன் மொனராகலை பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.டீ.எஸ்.பி. சந்தநாயக்கவின் ஆலோசனைகளுக்கமைய மொனராகலை தலைமையகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

# 12 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்: இளைஞரொருவர் கைது

(கெலும் குணதிலக்க)

தனமல்வில, சூரியஹார பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயது சிறுமியை வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில், சிறுமியின் காதலனான 19 வயது இளைஞரொருவர் தனமல்வில பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி சந்தேகநபருடன் காதல் தொடர்பில் இருந்து வந்துள்ளதுடன் சிறுமியின் விருப்பத்துடன் அவரை துஷ்பிரயோகப்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சிறுமி வைத்திய பரிசோதனைகளுக்காக தனமல்வில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனமல்வில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டீ.எம். கருணாதிலக தலைமையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.







நவகம்புர ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், சங்கத் தமிழ் (இந்து) மன்றம் நடத்திய கோலப்போட்டி கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றது. இந்த கோலப்போட்டியில் கலந்துகொண்டு 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களை பெற்றுக்கொண்ட போட்டியாளர்கள் உட்பட முதல் பத்து இடங்களை பெற்றவர்களுக்கும் சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# எதிர்காலத்தை பாதுகாக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன்

## நுவரெலியாவில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

தனது ஆட்சியில் பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு விசேட ஜனாதிபதி செயலணி உருவாக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மலையக பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் தைப்பொங்கல் விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. இநத நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் நன்றியறிதலின் முக்கியத்துவத்தை எடுத்துயம்பும் பொங்கல் நாளில் தொடர்ந்தும் உங்கள் மதவுரிமையை பாதுகாப்பேன் என உறுதியளிக்கின்றேன்.

அவரவர் அடையாளத்தை பாதுகாப்பதும், ஏனைய மதத்தினரை மதிப்பதும் உயரிய மனித குணமாகும். அவ்வாறான குணவியல்பை




பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம். எனது தந்தை பெருந்தோட்ட மக்களுக்கும் பிரஜா உரிமையை வழங்கி அவர்களின் வாழ்வுரிமையை பாதுகாத்தார்.

அவரே பிரஜா உரிமை என்ற முதலாவது போராட்டத்தை தொடங்கி வெற்றி பெற்றார். அதேபோல் பெருந்தோட்ட மக்களை காணி உரிமையாளர்களாக மாற்றும் இரண்டாவது போராட்டத்திலும் பிரேமதாசவின் மகன் வெற்றி பெற்றுத் தருவார். சிலர் இன, மத, குல பேதங்களை பயன்படுத்தி என்னை சாடினர்.

அதைக் கண்டு நான் அச்சமடைய போவதில்லை. எனது ஆட்சியில் இன,மத,குல மற்றும் அடிப்படைவாதம் போன்ற பேதங்கள் இன்றி அனைவருக்கும் பொதுவானதொரு ஆட்சி நடக்கும். இன்று சில மதவாதிகளுக்கும், இனவாதிகளுக்கும் மக்களின் துயரம் தெரிவதில்லை. ஆட்சியாளர்களுக்கும் இது தெரிவதில்லை.

காரணம் அவர்கள் கையில் கேஸ் வெடிப்பதில்லை. அவர்கள் கேஸ் வரிசையில் நிற்பதில்லை. அவர்கள் பசளையின்றி கஷ்டப்படவில்லை. அவர்கள் அரிசி,சீனி, எண்ணெய் வரிசைகளில் எப்போதும் நிற்பதில்லை. அவர்களுக்கு ஒருபோதும் பால்மா பிரச்சினையில்லை அல்லவா?

காரணம் அவர்களுக்கு அவை எல்லாம் அரண்மனைக்கு கொண்டுவந்து கொடுக்கப்படுகின்றது. தயவுசெய்து விழித்துக் கொள்ளுங்கள். மதவாதம், பிரிவினைவாதத்திற்கு மீண்டும் ஏமாற வேண்டாம். ஆகவே, எமது தாய்நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்த்து செயற்படுவது அவசியம். இயற்கை குளிர் காற்றை வழங்கினாலும் மக்களின் வயிற்றில் நெருப்பு எரிகின்றது. இன்று தரித்திரம் தலை தூக்கியுள்ளது. இந்தியா மலையக மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்குகின்றது.

இதற்கு நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, பெருந்தோட்ட மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன். வேறு யாருக்கும் இது முடியாது என்றார்.

# பாடசாலை அதிபர் உள்ளிட்ட 13 மாணவர்கள் மீது குளவிக்கொட்டு

## புஸ்ஸல்லாவையில் விபரீதம்

புஸ்ஸல்லாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெமுனபுர பாடசாலையில் அதிபர் உள்ளிட்ட மாணவர்கள் குளவிக் கொட்டுக்குள்ளாகியுள்ளனர்.

புஸ்ஸல்லாவை கெமனுபுர வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சாரணர் செயற்பாடுகளின்போதே இந்த குளவிக்கொட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவிக் கொட்டுச் சம்பவத்தில் பாடசாலையின் அதிபர், ஆண் மாணவர்கள் 10 பேர் மற்றும் மாணவிகள் மூன்றுபேர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் வஹூகபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குளவிக்கொட்டுக்குள்ளான மாணவர்களில் ஒருவர் மேலதிக விசாரணைகளுக்காக கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், புஸ்ஸல்லாவை பொலிஸார் மெலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெறும் சக்தி எமக்குண்டு

## பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச கண்டியில் தெரிவிப்பு

( கண்டி நிருபர்)

விவசாயிகள், விஞ்ஞானிகள், துறைசார் அறிஞர்களதும் கருத்துகளை அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும். மாறாக திமிர் பிடித்து உளறக்கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற கூட்டதொடரொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டாரநாயக்க அரசாங்கமே, டொமினியன் அந்தஸ்திலிருந்து கிடைக்கப் பெற்ற சுதந்திரத்தை சரியாகவும், முறையாகவும் பயன்படுத்தி, நாட்டின் தேசிய வளங்களைப் பாதுகாத்த அரசாங்கமாகும். 1948ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற சுதந்திரத்தை சரியாகப் பயன்படுத்திய இந்த அரசாங்கமும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியிலிருந்த அரசாங்கமாகும். எமக்கு கிடைத்த சுதந்திரத்தை சுட்டிக்காட்டி இலங்கையில் வெளிநாடுகளுக்கு உரிய பல நிறுவனங்களை எமது நாட்டின் உடைமைகளாக்கி தேசிய சொத்தாக்கிய கட்சி சுதந்திரக் கட்சியாகும்.

அன்று கட்டுநாயக்காவில் அமைந்திருந்த ரோயல் விமானப்படைத்தளம் மற்றும் திருகோணமலையிலிருந்த ரோயல் கடற்படைத்தளம் போன்றன பலவற்றை 1956ஆம் ஆண்டிலிருந்து சுதந்திரக் கட்சி தேசிய உடைமையாக்கியது.

திருகோணமலையில் அமைந்துள்ள 99 எண்ணெய்க்குதங்களை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நாட்டின் கனிய வளப்பாதுகாப்பு தொடர்பாக அவற்றை அரச உடைமையாக்கினார். பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி இவற்றை ஐ.ஓ.சி. என்ற இந்திய நிறுவனத்துக்கு விற்பனை செய்தது. 1978ஆம் ஆண்டின் பின்னர்தான் இந்திய ஐ.ஓ.சி. இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. ஸ்ரீமாவோ அம்மையாரால் தேசிய மயமாக்கப்பட்ட எண்ணெய்க் குதங்கள் இப்போது விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதாவது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஐ.ஓ.சி. நிறுவனம் மற்றும் இலங்கை-இந்திய கலப்பு நிறுவனம் ஆகிய மூன்று அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நாட்டின் தேசிய வளங்கள் இன்று படிப்படியாக இல்லாமலாக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை கனிய வளம் மற்றும் எண்ணெய் பாதுகாப்பு தொடர்பாக சுதந்திரக் கட்சி பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றியது. தேசிய சொத்துகளை பாதுகாக்கும் வகையில் கடந்த தேர்தலில் நாம் கூட்டுச் சேர்ந்தோம். எமது தேசிய வளங்களைப் பாதுகாக்க முடியும் என்று நம்பினோம். அந்த வகையில் சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களது 18 இலட்சம் வாக்குகளை கூட்டணிக்கு வழங்க முடிந்தது. அதனை மறந்து விட்டனர். எமது 18 இலட்சம் வாக்குகள் இல்லாவிட்டால் இன்று அவர்களால் ஆட்சியமைக்க முடியாது போயிருக்கும். அமைச்சரவையில் இரகசியமாக எடுக்கப்படும் முடிவுகளை நாம் எதிர்க்கும்போது ஆட்சியை சிதைப்பதாகக் கூறுவது தவறாகும்.

நாம் அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் முடியாத பட்சத்தில் வெளியே வந்தும் அதற்காக குரல் கொடுப்போம். அதனைத்தான் தற்போது செய்கிறோம். சுதந்திரக் கட்சியானது கொள்கை ரீதியில் வரும் விடயங்களுக்கு மட்டும் பதில் கொடுக்குமே தவிர பின்வரிசை அங்கத்தவர்களது சிறுபிள்ளைத்தனமான பேச்சுக்களுக்கு அல்ல. எனவே, அவர்களது அனுபவ முதிர்ச்சியற்ற சிறுபிள்ளைத்தனமான கதைகளைக் கேட்டு நாம் அரசை விட்டு வெளியே வரத்தேவையில்லை.

கூக்குரல் போடும் பின்வரிசை உறுப்பினர்கள் பலருக்கு பழைய விடயங்கள் தெரியாது. அல்லது நினைவில் இல்லை. எந்த ஒரு ஜனநாயக ரீதியான தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெறும் சக்தி எமக்குண்டு.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு நல்ல அரசியல் அனுபவம் உண்டு. இன்று பழைய அனுபவங்களை மறந்தும், அறிஞர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் விதந்துரைகளையும் மறந்தும் செயற்படுவதே இன்றைய பிரச்சினைகளுக்கு காரணமாகும். தேர்தல் ஒத்திவைப்பு விடயத்தை எதிர்க்கிறோம். ஒத்திவைப்பின் பிரதிபலனை தேர்தலின் பின்னர் அறிந்து கொள்வர். மூன்றில் இரண்டு என்று கூக்குரலிடுவதில் பயனில்லை. இன்றைய அரசு விவசாயிகளதும், விஞ்ஞானிகளதும் மற்றும் துறைசார் அறிஞர்களதும் கருத்துகளுக்கு செவிசாய்க்க வேண்டுமே தவிர திமிர் பிடித்து உளறக்கூடாது என்றார்.

# விபத்தில் நபரொருவர் சம்பவ இடத்திலேயே பலி

## கோபமடைந்த மக்கள் பஸ்ஸுக்கு தீ வைப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)



அவிசாவளை, மாலியன்கம வீதியில் ரிட்டிகஹவெல பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் 64 வயதான நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். தனியார் பஸ் மற்றும் துவிச்சக்கர வண்டி என்பன மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், பஸ்ஸில் பயணித்த நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனால் கோபமடைந்த உயிரிழந்தவரின் உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் பஸ் வண்டியை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். தனியார் ஆடை தொழிற்சாலை ஒன்றுக்குத் தொழிலாளர்களை அழைத்துச் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், பஸ் தீ வைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்றவுடன் அவ்விடத்திலிருந்து சாரதி தப்பிச் சென்றுள்ளதுடன், பஸ் பயணித்துக் கொண்டிருக்கையிலேயே, இவ்வாறு பஸ் வண்டி மீது தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், பஸ் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக்கு ரூ.3992 மில்லியன் நிதியொதுக்கீடு

## உல்லாசப் பயணத்துறைக்கு முன்னுரிமை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக்காக இவ்வாண்டில் அரசாங்கம் 3 ஆயிரத்து 992 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அகில சாலிய எல்லாவல தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக செய்தி செய்தியாளர்களுக்கு தகவல் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொரோனா தொற்று காரணமாக நாட்டின் அந்நிய செலாவணி வெகுவாக பாதிக்கப்பட்டது. வருடாந்தம் 4.5 பில்லியன் வருமானம் முற்றாக வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக உல்லாசப் பயணத்துறை வருமானம் முற்றாக முடங்கியது.

அதனால் இந்த நிதி ஒதுக்கீட்டில் எமது நாட்டுக்கு அவசியமான அந்நிய செலாவணியை மிக விரைவாகப் பெற உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் காணப்படுகிறது .

எனவே, உல்லாச பிரயாணத்துறைக்கு அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்து, இரத்தினபுரி மாவட்டம் மற்றும் பலாங்கொடை பிரதேசங்களிலுள்ள வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் உள்ள இடங்களை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் .

# மக்கள் மத்தியில் மனப்பாங்கு மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியம்

## அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் வலியுறுத்து



(கண்டி நிருபர்)

பிறப்பதற்கு இந்த நாடு சிறந்த நாடாயின் ஏன் வாழ்வதற்கு சிறந்த நாடாக இல்லை என அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் வேண்டருவே உபாலி தேரர் நேற்றுக் கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டி அஸ்கிரிய மகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் பிறந்தது குறித்துப் பெருமைப்படும் எம்மவர்கள் ஏன் இந்த நாட்டில் தொடர்ந்து வாழக்கூடாது? ஏன் வெளிநாடுகளுக்கு ஓடிச் செல்கின்றனர்? இது தொடர்பில் சகலரின் மத்தியிலும் மனப்பாங்கு மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும்.


அவ்வாறு நல்ல மனப்பான்மை கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கினால் குறைந்தது இன்னும் 25 வருடங்களில் நற்பிரஜைகளைக் கொண்ட நாட்டை எம்மால் கட்டியெழுப்ப முடியும். எனவே, நாட்டின் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதை விட மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்துவது மிக முக்கியமாகும். இது எமது பிள்ளைகளின் ஆரம்ப பாடசாலைப் பருவம் முதல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.





**மாத்தளை மாவட்டம், யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் வைபவம் யட்டவத்த பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மாத்தளை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும், மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாலக்க கோட்டேகொட தலைமையில் இடம்பெற்றது. (படங்கள் : மாத்தளை நிருபர்)**

# குடும்பநல உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை



(கண்டி நிருபர்)

வெளிக்களப் பணிகளில் ஈடுபடும் குடும்பநல உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார். மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் கண்டி ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்தார். இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, அமைச்சின் மாகாண செயலாளர் பீ.எச்.என்.ஜெயவிக்ரம, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிஹால் வீரசூரிய, கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்ட குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பாடசாலை நீர்க்குழாயைப் பயன்படுத்தி கற்குகையில் கள்ளச்சாராயம் தயாரிப்பு

## சந்தேக நபர்கள் இருவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி, அயகம தேயிலைக் கொலனி பிட்டகந்த கிராமியப் பாடசாலை ஒன்றின் நீர்க்குழாய்களின் நீரைப் பயன்படுத்தி கள்ளச்சாராயம் தயாரித்த இரண்டு சந்தேக நபர்கள் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடத்தில் நிலத்தின் கீழ் 18 அடி ஆழத்தில் கற்பாறையொன்றின் மறைவில், இந்த கள்ளச்சாராயத் தயாரிப்பு நடவடிக்கையை நீண்டகாலமாக இவர்கள் முன்னெடுத்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாடசாலையின் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் இவ்விடயம் தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதையடுத்து நடத்தப்பட்ட தேடுதல்களின்போது சந்தேக நபர்களின் நிலக்கீழ் இரகசிய அறையிலிருந்து 14 இலட்சத்து 40 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா, 19 ஆயிரம் மில்லி லீற்றர் மதுபான ஸ்பிரிட் ஆகியவற்றுடன் இந்நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




# AIA இன்ஷுரன்ஸ் நிறுவனத்துடன் Walk To Give திட்டத்தின் நூறாயிரம் காலடிகள் சவால்

புத்தாண்டு பிறக்கும்போது புதிய உறுதிமொழிகள் மற்றும் தீர்மானங்கள் எடுப்பதென்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. அந்த அடிப்படையில் கடந்த காலங்களின்போது மேலதிகமாக அதிகரித்த எமது உடல் எடையைக் குறைப்பதற்கு அல்லது கட்டுக்கோப்பான, திடமான மற்றும் ஆரோக்கியமான உடல் அமைப்பைப் பெறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் விரும்புகின்றோம். எனினும் நமது புத்தாண்டின் புதிய உறுதிமொழிகள் மற்றும் தீர்மானங்களை ஆரம்பிப்பதற்கு ஒரு சிறிய தூண்டுதல் ஒன்றின் உதவி நம் அனைவருக்கும் அவசியமாகும். அதனாலேயே AIA இன்ஷுரன்ஸ் 2022இற்கான உங்கள் உடற்பயிற்சிப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு 'AIA இன்ஷுரன்ஸ் உடன் Walk To Give' திட்டத்தின் நூறாயிரம் காலடிகள் சவாலினை (100K Steps Challenge) ஒழுங்கு செய்து மக்கள் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன், சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவும் தனது வர்த்தகநாம வாக்குறுதியை நிஜமாக்குகின்றது. இந்த காலடிச் சவால் திட்டத்தில் நீங்களும் பதிவு செய்து இணைந்து கொள்வதன் மூலமாக திடமான மற்றும் ஆரோக்கியமான உடலமைப்புடன் பெறுமதியான ஆச்சரியமூட்டும் பரிசில்களை வெற்றி பெறுவது மட்டுமின்றி இலங்கையில் முதன்மையாகக் காணப்படும் தொற்றா நோய்களான புற்றுநோய் மற்றும் அல்சைமர் போன்றவற்றின் அபாயம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கி அதற்கான நிதி திரட்டல் திட்டத்திற்கும் உதவ முடியும்.




உங்களின் சவாலானது ஜனவரி 15ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மெய்நிகர் (வேர்ச்சுவல்) நடைப்பயிற்சியாக களுத்துறையிலிருந்து காலிக்கு நூறாயிரம் காலடிகளை நிறைவு செய்வதாகவே அமையும். இச்சவாலில் நீங்களும் இணைந்து கொள்வதற்கு ayubo.life செயலியினை App Store அல்லது Play Store இலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். உண்மையில் இந்த நடைப் பயிற்சியினை நீங்கள் உங்கள் அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் மேற்கொள்ள முடியும். மேலும் இதன்போது மெய்நிகர் (வேர்ச்சுவல்) சவால் பாதையில் இது படம்பிடிக்கப்பட்டு வரைபடமாக்கப்படும். 'AIA இன்ஷுரன்ஸ் உடன் Walk To Give' திட்டத்தின் சவாலைப் பூரணப்படுத்துவதன் மூலம் AIA இன்ஷுரன்ஸ் நிறுவனத்திடமிருந்து Fitbit கடிகாரங்கள், AIA இன் அன்பளிப்புப் பொதிகள் மற்றும் இது போன்ற இன்னும் பல ஆச்சரியமூட்டும் வெகுமதிகளை வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை AIA உங்களுக்கு வழங்குவதோடு மேலும் மிகவும் முக்கியமாக இலங்கை புற்றுநோய் சங்கம் மற்றும் லங்கா அல்சைமர் சங்கம் போன்றவற்றிற்கு ரூபா.1 மில்லியன் நன்கொடை வழங்கும் திட்டத்திலும் பங்கேற்க முடியும்.

AIA இன் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் சிவந்தி டீ அல்விஸ் கருத்துத் தெரிவிக்கையில், 'சமூகத்திற்கு ஒன்றைத் திருப்பிக் கொடுப்பதன் மூலம் இப்புத்தாண்டை மிகவும் மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கவே நாங்கள் விரும்புகின்றோம். இது ஒரு தடவை மேற்கொள்ளப்படும் முயற்சியாக இன்றி இலங்கையர்கள் அனைவரும் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன், மிகச்சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்குத் தொற்றா நோய்களின் அபாயத்தைக் கடந்து சவாலை வெற்றி கொள்வதற்கு முதன்மையான வர்த்தக நாமம் ஒன்றாக நாங்கள் தொடர்ச்சியாக மிகவும் ஆர்வமுடன் இலங்கையர்களுக்கு உதவிகளை வழங்கிக்கொண்டே இருக்கின்றோம். இவை அனைத்திலும் மிகவும் முக்கியமான முயற்சியாக நாங்கள் விற்பனை செய்யும் ஒவ்வொரு காப்புறுதித் திட்டத்திற்காகவும் ரூபா.100 இனை நன்கொடையாக வழங்குவதன் மூலம் இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்துடனான எங்களது தொடர்ச்சியான 3 வருடக் கூட்டாண்மை அமைந்திருக்கின்றது' எனத் தெரிவித்திருந்தார்.

Ayubo.life நிறுவனத்தின் இணை நிறுவனர்/பிரதான நிறைவேற்று அதிகாரி சந்திமா குரே கருத்துத் தெரிவிக்கையில், 'உண்மையில் ஆரோக்கியம் என்பது மனித உரிமையாகும். கொவிட் பெருந்தொற்றினால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏதேனும் நன்மைகள் கிடைத்திருந்தால் அது முன்னொருபோதும் இல்லாத வகையில் உடல் மற்றும் உள ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கும் விதமாகவே அமைந்திருக்க வேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கையை இலகுவாகவும், குறைந்த செலவிலும், மகிழ்ச்சி மற்றும் குதூகலத்துடன் வாழும் விதமாக உருவாக்குவதன் மூலமாக ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்புவதனை ஒட்டியே எங்கள் அடிப்படைத் தத்துவம் அமைந்திருக்கின்றது. ஆகவே இலங்கையர்கள் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் மிகச்சிறப்பான வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவுவது மட்டுமின்றி இலங்கையில் காணப்படும் இரு முதன்மையான தொற்றா நோய்களின் விழிப்புணர்வை உருவாக்குவதற்காகவும் 'AIA இன்ஷுரன்ஸ் உடன் Walk To Give' திட்டத்தின் நூறாயிரம் காலடிகள் சவாலுடன் பங்காளராகச் செயற்படுவதில் நாங்கள் மிகவும் பெருமிதம் கொள்கின்றோம்' என்றார்.

# SLT-MOBITEL Entrepreneurship Studio இனால் முதல் தொகுதி அங்கத்தவர்களுக்கு Demo Day முன்னெடுப்பு

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL இனால், அதன் முன்னணி செயற்றிட்டமான Entrepreneurship Studio 2021-2022 இன் முதல் தொகுதி அங்கத்தவர்களுக்கான 'Demo Day' ஐ முன்னெடுத்திருந்தது. ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு தமது சிந்தனைகளை கட்டியெழுப்பவும், வளர்த்துக் கொள்ளவும் அவசியமான கடுமையான வழிகாட்டல்கள் மற்றும் பயிற்சிகளை வழங்கும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

Entrepreneurship Studio 2021-2022 முதல் தொகுதி அங்கத்தவர்களுக்காக 20 தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். நிபுணர்கள் இவர்களுக்கு பல்வேறு கட்டங்களில் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினர். 14 வார காலம் பயிற்சிகளுக்கு முகங்கொடுத்திருந்ததுடன், "Demo Day"இனால் அவர்களின் பயணம் மற்றும் தயாரிப்புகள் போன்றன நடுவர்களுக்கு சமர்ப்பிக்கும் வகையில் அமைந்திருந்தன. 12 வெற்றியாளர்களுக்கு தமது வியாபாரங்களை கட்டியெழுப்பிக் கொள்வதற்கு, ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான ஆரம்பநிலை பொதி வழங்கப்படும்.

தேசத்தின் தொழில்நுட்ப முன்னோடி எனும் வகையில் SLT-MOBITEL இனால், டிஜிட்டல் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், உள்நாட்டு ஆரம்பநிலை கட்டமைப்பில் கவனம் செலுத்தும் அமைப்பாக Entrepreneurship Studio ஐ நிறுவியிருந்தது. பிரதான துறைகளைச் சேர்ந்த தொழில்நுட்ப ஆரம்பநிலை நிறுவனங்களை மற்றும் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பு என்பது புத்தாக்கமான தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு சேவைகளை மேற்கொள்வதற்கு உதவும் வகையில் அமைந்திருந்தது.




மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் 200க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. தெரிவு செய்யப்பட்ட 20 தொழில் முயற்சியாளர்கள் பரிபூரண கருத்தரங்கு தொடர்கள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் முகாம்களில் பங்கேற்று வழிகாட்டல்களையும் பயிற்சிகளையும் பெற்றிருந்தனர். இவை அனைத்தும் இந்த இளம் தொழில் முயற்சியாளர்களை தமது சிந்தனைகளை செயற்படுத்துவதற்கு உதவும் வகையில் அமைந்திருந்தன.

இந்த அமர்வுகளின்போது, பங்குபற்றுநர்களுக்கு சந்தைப்படுத்தல், உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பம், தந்திரோபாயம், சட்டம், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் காணப்படும் வாய்ப்புகள் போன்ற பரந்தளவு தலைப்புகளில் பெறுமதி வாய்ந்த தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. SLT-MOBITEL இன் நிபுணத்துவம் மற்றும் வெளியக பங்களிப்பு போன்றனவும் இவர்களுக்கு கிடைத்திருந்தன.

'Entrepreneurship Studio' நிகழ்ச்சித் திட்டம், SLT Group இன் முன்னணி ஆய்வு மற்றும் அபிவிருத்தித் திட்டமான 'The Embryo' இனால் முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டின் வளர்ந்து செல்லும் தொழில்நுட்ப கட்டமைப்பின் மையமாக இது அமைந்திருப்பதுடன், உள்நாட்டு திறமைசாலிகளுக்கு பெறுமதி வாய்ந்த வெளிப்பாட்டை வழங்கி, பன்நாளிகை புத்தாக்கத்தை வழிநடத்தி, நவீன டிஜிட்டல் தீர்வுகளை கட்டியெழுப்ப உதவியாக அமைந்துள்ளது.

முதலாவது Entrepreneurship Studio நிகழ்ச்சி வெற்றிகரமாக அமைந்திருந்ததைத் தொடர்ந்து, SLT-MOBITEL இனால் அடுத்த ஆண்டிலும் மற்றுமொரு நிகழ்வை ஏற்பாடு செய்ய திட்டமிட்டுள்ளது. ஆர்வமுள்ள ஆரம்ப நிலை நிறுவனங்கள் இந்த நிகழ்வுக்கு விண்ணப்பிப்பது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.


திகதி 15.01.2022 | சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் | www.nlb.lk | NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4648
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,293,150.00
ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கங்கள் 8 6 1 9 4 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,400,873.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2943
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,049,200.00
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 21 39 45 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,827,094.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 996
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,975,720.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 167,130,846.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து F | சுப்பர் இலக்கம் 17 | வெற்றி இலக்கங்கள் 26 29 36 69

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 678
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,068,840.00
ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கங்கள் 21 75 79 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,681,522.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1198
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,976,860.00
வெற்றி இலக்கினம் மகரம் | வெற்றி இலக்கங்கள் 0 0 9 6 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,712,648.40

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் : 1668
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,152,640.00
சுப்பர் இலக்கம் 09 | வெற்றி இலக்கங்கள் 39 46 55 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,554,707.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416


# கோலாகலமாக நடைபெற்ற Business World International விருது வழங்கும் விழா







The Business World International Organization ஏற்பாடு செய்த Business World International விருது வழங்கும் விழா அண்மையில் கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் கோலாகலமாக நடைபெற்றது. ஆசிய பசுபிக் வலயத்தில் சிறந்து விளங்கும் தொழில்முயற்சிகளை கௌரவிக்கும் முன்னணி விருது விழாவாக BWIO விருது விழா சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளது. சர்வதேச வர்த்தக உலகில் மிகச் சிறந்த முறையில் தொழில்முயற்சிகளை முன்னெடுக்கும் நிறுவனங்களை இனங்கண்டு பாராட்டி கௌரவிக்கும் நோக்கத்துடன் செயற்படுகின்ற The Business World International Organization அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கும் ஓர் அமைப்பாகும். ஆகச் சிறந்த மற்றும் சீரான நிர்வாக நடைமுறைகளுடன் இயங்குகின்ற தொழில் முயற்சிகளை கௌரவிப்பதன் மூலம் சிறந்த தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பணியை BWIOவிருது விழா செய்கிறது. புதிய தொழில்முயற்சிகள், சிறிய மற்றும் பாரியளவிலான தொழில்முயற்சிகள், சேவைகள் மற்றும் உற்பத்தி தொழில்முயற்சிகள், சமூக நலனோம்புகை மற்றும் நிலைத்தகு பேண் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற தொழில்முயற்சிகள் என 30 பிரிவுகளின் கீழ் BWIO விருதுகள் வழங்கப்படுகின்றன.

BWIO விருது வழங்கும் விழாவில் அரச மற்றும் தனியார் துறைகளின் உயர் நிர்வாக மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள், முன்னணி தொழில் அதிபர்கள் மற்றும் பல்வேறு தொழில் வல்லுனர்கள் கலந்துகொண்டார்கள். இம்முறை விருது விழாவில் பிரதம விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஆசிய, ஆபிரிக்க வணிக மற்றும் கைத்தொழில் சபையின் தலைவர் கலாநிதி ஜீ.டீ சிங்ஹாவும் கௌரவ விருந்தினர்களாக அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, செந்தில் தொண்டமான், முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். BWIO International Chapter தலைவர் கலாநிதி டெக்ஸ்டர் பர்னாந்து, கலாநிதி தரிந்து விஜேநாயக்க (உப தலைவர் - USA International Chapter) கலாநிதி எம்.ஏ.ஏ ஜபார் (உப தலைவர் - SL Chapter) ஆகியோர் விருந்தினர்களை வரவேற்றனர். விழாவின் பிரதான உரையை Asia German Sports Exchange பிரதம நிறைவேற்று அதிகாரியும் BWIO ஆலோசனைக் குழு அங்கத்தவருமான பேராசிரியர் டியட்மர் டோரிங் ஆற்றினார்.

# யாழில் சிறப்பாக இடம்பெற்ற பட்டிப்பொங்கல்






பட்டிப் பொங்கல் விழா நேற்று முன்தினம் (15) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் – சந்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் கோ பூசை இடம்பெற்று, பின்னர் கோ பவனி மற்றும் கோமாதா கீர்த்தனங்கள் என்பன முறையே இடம்பெற்றது.

கோ பவனியானது ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி ஊடாக மின்சார நிலைய வீதி, யாழ். பஸ் நிலைய மேற்கு வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி ஊடாக ஆலயத்தை வந்தடைந்தது.

குறித்த கோமாதா உற்சவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சமய குருமார்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அடியார்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# பட்டிப்பொங்கலில் கோமாதா வதைக்கு எதிராக தீர்மானம்

## - அரசின் நிலைப்பாட்டுக்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு!

மிருகவதை செய்யப்படுவதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பட்டிப் பொங்கல் தினத்தில் கோமாதா உற்சவம் - 2022 இல் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு வலு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

பட்டிப் பொங்கல் தினமான நேற்று முன்தினம் (15) யாழ்ப்பாணம் சத்திரம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், "என்னைப் பொறுத்தவரையில் மிருகவதை முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக எனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி வருகின்றேன்.

கடந்த காலங்களில் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு விவகாரத்திலும் தமிழர் தரப்புகள் சில அரசியல் நோக்கங்களுக்காக பல்வேறு கருத்துகளை வெளியிட்டன. எனினும், மிருகங்கள் சித்திரவதை செய்யப்படக்கூடாது என்பதில் நான் உறுதியான கருத்தினையே அன்றும் வெளியிட்டிருந்தேன். இந்நிலையிலேயே பசு மற்றும் இடப வதைக்கு எதிரான சட்டத்தினை கொண்டு வருவதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆர்வம் செலுத்தி வருகின்றார்.



அத்துடன் அந்த நிலைப்பாட்டிலேயே தற்போதைய அரசாங்கமும் இருக்கின்றது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டுக்கு வலு சேர்க்கும் வகையில் இன்றைய உங்களின் தீர்மானம் அமைந்திருக்கின்றது. உங்களின் எதிர்பார்ப்புகளை அடுத்த அமைச்சரவையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்று, குறித்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்துவேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, பசு மற்றும் இடப வதையைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட தீர்மானத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்கான நினைவுச் சின்னம் ஒன்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் விழா




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் விழா கலாநிதி சிதம்பரம் மோகன் தலைமையில் யாழ். நெல்லை ஆதினா மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (14) வெகுசிறப்பாக நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரெஜினோல்ட் குரே ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், மேஜர் ஜெனரல் செனரத் யாபா விசேட அதிதியாகவும் சர்வமதத் தலைவர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின்போது கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவருமான வண.பிதா கலாநிதி எஸ்.சந்ரு பெர்னாண்டோ ஆசி உரை வழங்கினார்.

வடமாகாண பிரதம செயலாளர், யாழ்ப்பாணம் இந்தியன் துணை தூதரகத்தின் பதில் தூதுவர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# புங்குடுதீவு பனைமரக் கடத்தலுக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் தொடர்பில்லை

## - வேலணை பிரதேச செயலாளர் கிரிதரன் சுட்டிக்காட்டு



யாழ். புங்குடுதீவில் இருந்து சட்டவிரோதமாக எடுத்துச்செல்லப்பட்ட பனைமரக் குற்றிகளுக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் தொடர்பு கிடையாது என வேலணை பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புங்குடுதீவில் சீவிய மரங்களுடன் லொறி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

புங்குடுதீவில் இருந்து ஒன்பது பனைமரங்களில் இருந்து 55 சீவிய மரத்துண்டுகளை ஏற்றுவதற்காக பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் அதற்கு மேலதிகமாக பல பனைமரத் துண்டுகள் ஏற்றப்பட்ட நிலையில், பொலிஸாரால் குறித்த லொறி சோதனையிடப்பட்டு கைப்பற்றப்பட்டது.

சில ஊடகங்களில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராமசேவையாளருக்கு தொடர்பிருப்பதாக செய்திகள் வெளிவந்ததை அவதானிக்க முடிந்தது.

பனைமரம் ஏற்றிச்செல்வதற்கும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் நிர்வாக ரீதியான எவ்வித தொடர்பும் இல்லை. ஆகவே, அனுமதி கடிதத்தை மீறி அளவுக்கு அதிகமான மரங்களை ஏற்றியமை உறுதிசெய்யப்பட்ட நிலையில் எம்மால் வழங்கப்பட்ட அனுமதி கடிதத்தை பொலிஸாரிடம் தெளிவுபடுத்தியுள்ளேன்.

ஆகவே, பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் குறித்த பனைமரக் கடத்தலுக்கும் தொடர்பு இல்லை என்பதை கூறிக்கொள்வதோடு, சம்பந்தப்பட்டிருந்தால் பொலிஸ் விசாரணைகளில் தெரியவரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழிலிருந்து கொழும்புக்கு கஞ்சா கடத்திய இருவர் வவுனியாவில் கைது

## - 250 கிலோ கஞ்சா மீட்பு





யாழிலிருந்து கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட 250 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா, ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கூலர் ரக வாகனம் ஒன்றினை நேற்று முன்தினம் (15) வவுனியா, ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியில் வழிமறித்து சோதனை செய்தபோது குறித்த வாகனத்தில் கஞ்சா மறைத்து கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வாகனத்தை முழுமையாக சோதனைசெய்தபோது பொதி செய்யப்பட்ட நிலையில் 250 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. இதனை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் எடுத்துச் சென்றமை தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஈரப்பெரியகுளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# காணாமல்போன சிற்றூர்தி சேவை சாரதி மண்டிகை குளத்திலிருந்து சடலமாக மீட்பு

(யாழ். நிருபர்)

யாழில் கடந்த சில தினங்களாக காணாமல்போயிருந்த உள்ளூர் சிற்றூர்தி சேவை சாரதி ஒருவர் சங்கானை – மண்டிகை குளத்திலிருந்து கடந்த 14ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாதகல் பகுதியை சேர்ந்த கடம்பன் (வயது 38) என்ற குறித்த குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் கடந்த சில தினங்களாக காணாமல்போயிருந்ததாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குளத்திலிருந்து கடந்த 14ஆம் திகதி பிற்பகல் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சட்டவிரோதமாக தமிழகத்திற்குள் நுழைந்த யாழ். மாதகல் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மாதகல் பகுதியை சேர்ந்த ஒருவர் தமிழகத்திற்குள் சட்டவிரோதமாக நுழைந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


யாழ்ப்பாணம், மாதகல் பகுதியை சேர்ந்த 44 வயதான அன்ரனி சென்பீட்டர் (மதன்) என்பவரே வேதாரணியம், செம்போடை பகுதியில் நேற்று முன்தினம் (15) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் சுமார் 20 வருடங்கள் தங்கியிருந்த பின், 2012ஆம் ஆண்டில் இலங்கை திரும்பியிருந்த இந்த நபர், கடந்த ஒக்டோபர் மாதம் மீண்டும் தமிழகத்திற்கு, சட்டவிரோதமாக படகு மூலம் நுழைந்திருந்தார்.

வேதாரணியத்தை அண்மித்த பகுதியில் உறவினர்களுடன் தங்கியிருந்த பின்னர், தமிழகத்தின் பிற பகுதிகளிலுள்ள உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்கு சென்று சந்தித்து விட்டு, செம்போடை பகுதிக்கு திரும்பியபோது, இரகசிய தகவலின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் தற்போது சைதாப்பேட்டை உப சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# அர்ப்பணிப்புடன் பணியாற்றிய வைத்தியர் அமரர் சிதம்பரநாதனுக்கு கிளிநொச்சி ஊடக அமையம் இரங்கல்




(மு.தமிழ்ச்செல்வன்)

இடம்பெயர்வு, யுத்தம், மீள்குடியேற்றம் என அனைத்து காலங்களிலும் கிளிநொச்சியில் மக்களையும் மாவட்டத்தையும் நேசித்த மருத்துவராக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் வைத்தியர் சிதம்பரநாதன், அவரின் மறைவு மாவட்ட மக்களிடம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது என கிளிநொச்சி ஊடக அமையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி ஊடக அமையம் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சியின் மூத்த வைத்தியர் சிதம்பரநாதன், நேற்று முன்தினம் (15) அவரது 91ஆவது அகவையில் அமரரானார். அவர் மிகவும் நேசித்த கிளிநொச்சி வைத்தியசாலையில் காலை 6.30 மணியளவில் அவரது உயிர் பிரிந்தது.

இலங்கைத் தரைப்படையின் மருத்துவ அணியில் தொண்டர் படை அதிகாரியாக தமது மருத்துவ வாழ்வினை ஆரம்பித்த அவர், பின்னாளில் கிளிநொச்சி மருத்துவத்துறையின் உயிர்நாடியாக விளங்கினார்.

தமது சேவைக்காலத்தில் வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்தியர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி எனப் பல்வேறு மருத்துவ நிர்வாகப் பதவிகளை வகித்த அவர் தற்போதைய கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலையாக இருந்தபோது அதன் பொறுப்பதிகாரியாக கடமையாற்றினார். 90ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி வைத்தியசாலை இடம்பெயர்ந்து அக்கராயன் வைத்தியசாலையில் இயங்கிய காலப்பகுதியில் அன்னாரது சேவைகள் காரணமாக கடவுளுக்கு நிகராக மக்களால் கொண்டாடப்பட்டவர்.

பின்னாளில் கிளிநொச்சி வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டு மாவட்டப் பொது வைத்தியசாலையாக மாறிய காலப்பகுதியில் அவ் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவின் பொறுப்பு வைத்தியராக பணிபுரிந்தார்.

2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி வைத்தியசாலை இடம்பெயர்ந்த காலப்பகுதியிலும் பின்னர் 2009இல் ஆரம்பித்த மீள்குடியேற்ற காலத்திலும் வன்னிப் பிரதேசத்தின் பல வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகளில் கடமை செய்து மக்களைக் காத்தார்.

தாம் இளைப்பாறிய பின்னரும் கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்பட்ட வைத்தியர் பற்றாக்குறையினை மனத்தில் கொண்டு தொடர்ந்து தமது பணியினைச் செம்மையாக வைத்தியர் சிதம்பரநாதன் செய்துவந்தார்.

மீள்குடியேற்ற காலப்பகுதியில் தமது நண்பரான காலஞ்சென்ற வைத்தியர் கோபாலபிள்ளைக்கு உதவியாக மல்லாவியிலிருந்து உருத்திரபுரம் வரை நோயாளர்களைப் பார்வையிட்ட வைத்தியர் சிதம்பரநாதன், வன்னிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடமாடும் மருத்துவ சேவைகளிலும் தமது சேவையினை வழங்கி உதவியவர் ஆவார்.

வைத்தியர் சிதம்பரநாதனின் சேவையானது வன்னிப் பிரதேச மக்கள், சுகாதாரப் பணியாளர்கள், சுகாதார அமைச்சு மற்றும் மாகாண நிர்வாகத்தினர் ஆகியோரால் மெச்சப்பட்டமை வரலாறாகும்.

மருத்துவசேவைக்கு மேலதிகமாக ஆன்மீகத்துறையிலும் மிகுந்த நாட்டம் கொண்ட வைத்தியர் சிதம்பரநாதன், சுகாதார சேவையாளர்களுக்கு ஊக்கியாகவும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குப் புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

"நீங்கள் நோயாளர்களுக்கான உங்களது கடமையைச் செய்யுங்கள் ஆனால் பலனை எதிர்பாராதீர்கள். பகவான் (சத்தியசாய் பாபா) உங்களைப் பார்த்துக்கொள்வார்" என்பதே சுகாதாரப் பணியாளர்களுக்கு அவர் எப்போதும் வழங்கும் ஆலோசனையாகும்.

கிளிநொச்சியில் பல மருத்துவர்களுக்கும் மருத்துவ மாணவர்களுக்கும் உதாரணப் புருஷராக விளங்கியவர் வைத்தியர் சிதம்பரநாதன் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா



(ஐ. சிவசாந்தன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா நேற்று (16) காலை 8.30 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் ஆரம்பமானது.

நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ் கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் மேள தாள வாத்தியங்கள் முழங்க, பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், கோலாட்டம் என்பனவற்றுடன் விருந்தினர்கள் யாழ். மாநகர சபை முன்றலிலிருந்து நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது யாழ். மாநகர சபையால் இயல்துறைக்கான அரசகேசரி விருது கவிஞர் சோ.பத்மநாதனுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இந்த அமர்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் குழுவினரின் வழக்காடு மன்றம் விசேட அம்சமாக அமைந்துள்ளது.

ஐ.பி.சி. தமிழின் அனுசரணையில் காலை முதல் இரவு வரை இயற்துறை, இசைத்துறை, நாடகத்துறை என மூன்று அமர்வுகளாக நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இயற்துறை அமர்வு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

## சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த மீனவர்கள் கைது



(ஜூட் சமந்த)

காலாவதியான அனுமதிப்பத்திரத்தினூடாக கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த 06 மீனவர்கள் கடற்படையினரால் நேற்று முன்தினம் (15) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மங்கலஎலிய, கொத்தன்தீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

சிலாபம் பிரதேசத்திலுள்ள ஆழ்கடலிலேயே இவர்கள் கடலட்டை பிடித்துள்ளனர். கடலட்டை பிடிப்பதற்காக அவர்களுக்கு சமுத்திர திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அது காலாவதியாகியுள்ளதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 20 ஒட்சிசன் சிலிண்டர்கள், சுழியோடுவதற்கு பயன்படுத்தப்படும் 05 உபகரணத் தொகுதிகள், 60 கடலட்டைகள் மற்றும் 02 கடல்சார் இயந்திரங்கள் என்பன கடற்படை அதிகாரிகளினால் கைபற்றப் பட்டுள்ளன. இதன்போது கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக, சிலாபம் சமுத்திர காரியாலயத்தில் ஒப்படைக்க கடற்படை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



***கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்ரமசிங்கவின் சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக 'ஆத்ம சபாபதி' என்னும் விருதை கொழும்பு காயத்திரி சித்தர் ஸ்ரீ முருகேசு மகரிஷி ஆத்மயோக ஞானசபாவைச் சேர்ந்த உமாஜினி மைந்தன் வழங்கினார். சபாவின் பீடாதிபதி சித்தா புருசா சுவாமி ஸ்ரீ சங்கரானந்தாஜீ அருகில் காணப்படுகின்றார்.***

## அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தின் பேராளர் மாநாடு

### புதிய நிர்வாகிகளும் நியமனம்




(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தின் பேராளர் மாநாடு, கொழும்பு மருதானை எம்.ஐ.சி.எச். மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

மாநாட்டில் அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகள் ரீதியாக ஒருவர் வீதம் பெருந்திரளாக அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் நிர்வாகிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். மேலும், பிரதம பேச்சாளராக ஜாமிஆ நளீமியா கலாபீட பிரதி பணிப்பாளரும், விரிவுரையாளருமான அஷ்ஷேஹ் எம்.எச்.எம்.பளீல், விசேட அதிதிகளாக உயர் நீதிமன்ற சட்டத்தரணி றுஷ்தி ஹபீப் மற்றும் சட்டத்தரணி றூமி, முன்னாள் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அஷ்ஷேஹ் நூருல் அமீன், மௌலவி எம்.எம்.முஹம்மட் (முன்னாள் பரீட்சை ஆணையாளர்) இலங்கை பரீட்சை திணைக்களம், அஷ்ஷேஹ் எம்.எம்.ஏ.லாபிர், ஸப்பான் ஏ.அஸீஸ், முன்னாள் மத்திய சம்மேளனத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

2022ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.



அல்ஹாஜ் எம்.ஆர்.எம்.ஸரூக் (தலைவர்), எம்.எப்.எம்.பாஹிம் (பொதுச் செயலாளர்), அல்ஹாஜ் எம்.எச்.எம்.உவைன் (பொருளாளர்), உப தலைவர்களாக பாறூக் பதீன் (ஆசிரியர் வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்), அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர், அஷ்ஷேஹ் எம்.எம். றபியுத்தீன், எஸ்.எம்.ஹிஷாம் (உப செயலாளர்), அஷ்ஷேஹ் எம்.அக்ரம் ஜுனைத் (உப பொருளாளர்), அல்ஹாஜ் கலாநிதி பி.எம்.பாறூக் (கணக்காய்வாளர்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்கள் எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரையில் நிர்வாகிகளாக செயற்படுவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பேராசிரியர் அக்பர் பாராட்டி கௌரவிப்பு



(ரஸீன் ரஸ்மின்)

மன்னார் விடத்தல்தீவு இஸ்லாமிய இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சிரேஷ்ட மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் நிபுணர் பேராசிரியர் எஸ்.எப்.எல்.அக்பரின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (16) மதுரங்குளி ட்ரீம் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் விடத்தல்தீவு இஸ்லாமிய இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் மில்லத் மாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிரேஷ்ட மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் நிபுணர் பேராசிரியர் எஸ்.எப்.எல்.அக்பர், வடமேல் மாகாண முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் முஹம்மது பரீத், முன்னாள் பிரதேச செயலாளர் எம்.எம்.முஹ்சீன் உட்பட வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், உலமாக்கள், கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது 'வாழிடமிழந்த மானிடம்' எனும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் சுகைப் எம்.காசிமினால் கவிதை நிகழ்த்தப்பட்டதுடன், முன்னாள் பிரதேச செயலாளர் எம்.எம்.முஹ்சீன் இடம்பெயர்வுக்கு முன்பும், பின்பும் 'விடத்தல்தீவு மண்ணின் கல்வி நிலை' எனும் தலைப்பிலும் உரையாற்றினார்.

அத்துடன், விடத்தல்தீவு மண்ணிலிருந்து சமூக சேவைபுரிந்து மரணித்த சமூக சேவையாளர்களும் இதன்போது நினைவுகூரப்பட்டனர்.

அத்தோடு, இஸ்லாமிய பார்வையில் மகப்பேற்று மருத்துவம், சட்டத்தின் பார்வையில் மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் மருத்துவம், விடத்தல்தீவு பிரதேச கல்வி முன்னேற்றத்திற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்ற தலைப்புக்களில் சிறப்பு உரைகளும் இடம்பெற்றன.

அத்துடன், மன்னார் விடத்தல்தீவு கிராமத்தைச் சேர்ந்த சிரேஷ்ட மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் நிபுணர் பேராசிரியர் எஸ்.எப்.எல்.அக்பரின் சேவைகளைப் பாராட்டி சிறப்பு அதிதிகளால் பொன்னாடை போர்த்தியும், விடத்தல்தீவு இஸ்லாமிய இளைஞர் ஒன்றியத்தினால் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சந்தேகத்துக்கிடமான துப்பாக்கியொன்று மீட்பு



(ஜூட் சமந்த)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கியொன்று, மஹவெவ, பாஹல தொடுவாவ பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றின் குப்பை கூளமொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 14ஆம் திகதி மாலை அந்த தோட்டத்தின் உரிமையாளரான ருவன் குமார என்பவரால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய இந்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தை துப்பரவு செய்துக்கொண்டிருந்தபோது குப்பை கூளமொன்றிலிருந்து இந்த துப்பாக்கி கிடைக்கப்பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த துப்பாக்கியின் இலக்கம் மற்றும் தயாரித்த நாடு என்பவை தொடர்பான விபரங்கள் தெளிவின்றி இருப்பதாகவும், இந்த துப்பாக்கி நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடுவாவ பொலிஸாரினால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தைப்பொங்கல் நிகழ்வு அதன் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், அதன் தலைவர் ஹட்சன் சமரசிங்க மற்றும் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் கலந்துகொண்டனர்.**



# கொழும்பு – கண்டியை இணைக்கும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம – குருநாகல் பகுதி திறப்பு

## மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அவ்வாறே நிறைவேற்றப்படும்

## விவசாயிகள் பாதுகாக்கப்படுவர் என்று உறுதி

## அபிவிருத்தியின் பங்காளிகளாவதற்கு ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு

## பொய்ப் பிரசாரங்களால் மனம் தளரவேண்டாம் - ஜனாதிபதி தெரிவிப்பு

## "செயல்களினூடாகவே விமர்சனங்களுக்கு பதிலளிக்கப்படும்" - பிரதமர் தெரிவிப்பு





கொழும்பு – கண்டியை இணைக்கும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம முதல் குருநாகல் வரையிலான பகுதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால், நேற்று முன்தினம் (15) பிற்பகல் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

40.91 கிலோமீற்றர்களைக் கொண்ட மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டமான "அத்துகல்புர நுழைவு", மீரிகம, நாகலகமுவ, தம்பொக்க, குருநாகல் மற்றும் யக்கபிட்டிய ஆகிய 05 இடமாற்றங்களைக் கொண்டுள்ளது.

இந்தப் பகுதியை நிர்மாணிப்பதற்கு, அரசாங்கம் 149 பில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது. அனைத்து நிர்மாணப் பணிகளும், உள்நாட்டுப் பொறியியலாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துக்கு மத்தியில், மீரிகம நுழைவாயிலின் நினைவுக் கல்லை, ஜனாதிபதி மற்றும் பிரதமர் திரைநீக்கம் செய்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி வீதியைத் திறந்து வைத்ததுடன், அதன் பின்னர் பிரதான பொதுக்கூட்டம் நடைபெறும் குருநாகல் இடமாற்றத்துக்குப் புறப்பட்டனர்.

மீரிகமவிலிருந்து குருநாகல் வரையிலான இடமாற்ற வீதிக்கருகில் கூடியிருந்த மக்கள், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அமோக வரவேற்பளித்தனர்.

கொழும்பு - கண்டி அதிவேக நெடுஞ்சாலையானது, மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது. முதற்கட்டமான கடவத்தை முதல் மீரிகம வரையிலான தூரம் 37.9 கிலோமீற்றர் ஆகும். மூன்றாம் கட்டமான பொத்துஹெர முதல் கலகெதர வரையிலான தூரம் 32.5 கிலோமீற்றர் தூரமாகும். கொழும்பிலிருந்து கலகெதர வரையான முழு வீதியை, 2024ஆம் ஆண்டளவில் நிறைவுசெய்ய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் வகையில், மீரிகம முதல் குருநாகல் வரையிலான பகுதியின் சுமார் 10 கிலோமீற்றர் தூரம் (25%), தூண்களின் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, இதில் வாகனங்களைச் செலுத்தும்போது ஏற்படும் சத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வின் போது உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐந்து வருடங்களில் நிறைவேற்றுவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்த அனைத்தையும், எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் நிறைவேற்றுவதாகத் தெரிவித்தார்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தலைவர் என்ற வகையில், எப்போதும் விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்துச் செயற்படுவதாக உறுதியளித்த ஜனாதிபதி, தான் ஆட்சிக்கு வந்த பின்னர் வயல்களில் கால் பதித்து விவசாயத்தில் ஈடுபட்ட இளைஞர்களை மறக்க முடியாது என்றும், அவர்களைத் தொடர்ந்து பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுமாறு அழைப்பு விடுப்பதாகவும் வலியுறுத்தினார்.

95 ரூபாவுக்கேனும் நெல்லைக் கொள்வனவு செய்து விவசாயிகளைப் பலப்படுத்துமாறு விவசாயத்துறை அமைச்சருக்குத் தான் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

ஊடகங்களுடன் போட்டியில்லை. நாட்டைக் கட்டியெழுப்பவே நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம்.

அபிவிருத்தியின் பங்காளியாக இணைந்திருக்குமாறு, ஊடகவியலாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். பொய்ப் பிரசாரங்களினால் மனம் தளர்ந்துவிடாமல், நாட்டு மக்களின் நலனுக்காக ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு, அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும், ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இன்றைய உலகம் மற்றும் சமூகம் என்பன மிகவும் வேகமானவை. எனவே, காலத்தை உயர்ந்தபட்சம் உபயோகப்படுத்திக்கொள்ள சிறந்த போக்குவரத்துக் கட்டமைப்பு அவசியமாகும் என்றும் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, உலகில் அபிவிருத்தியடைந்ததாகக் கருதப்படும் நாடுகளின் முன்னேற்றத்துக்கு, முறையான போக்குவரத்து பிரதான காரணியாக மாறியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதிவேக நெடுஞ்சாலைகளின் அளவுக்கு விமர்சிக்கப்படும் திட்டம் ஒன்று இந்த நாட்டில் இல்லை எனலாம். விமர்சித்துக்கொண்டே அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிப்பவர்களின் விமர்சனங்களுக்கு வார்த்தைகளால் பதிலளிப்பதை விட செயல்களினால் பதிலளிப்பதே அவசியம் என்றும், மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக நாடு மூடப்பட்டிருந்த போதிலும், மனிதாபிமானமிக்க தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி, மக்களின் நலன் கருதி எவ்வாறு தீர்மானங்களை எடுத்தார் என்பதை நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இங்கு நினைவு கூர்ந்தார். எதிர்வரும் மூன்று வருடங்களில் நாட்டைக் கட்டியெழுப்ப, ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்கள் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி எதிர்பார்க்கும் இலக்குகளைக் கொண்ட அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் ஏனைய வீதிக் கட்டமைப்புகள் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் இடம்பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, ஜனாதிபதி , விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர்.

இந்நிகழ்வில், மகா சங்கத்தினர், ஏனைய மதத் தலைவர்கள், அமைச்சர்கள், ஆளுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பிரதேசவாசிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.









# வறட்சியான காலநிலையால் மின்னுற்பத்தி பெரிதும் பாதிப்பு

## பொறியியலாளர்கள் தெரிவிப்பு



விக்டோரியா நீர் மின் நிலையத்தின் மூன்று விசையாழிகளும் இயங்கி வருவதாகவும், அவை 4.5 முதல் 5.5 கிகாவோட் மணிநேர மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகவும் விக்டோரியா நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளரான வசந்த எஹலபிட்டிய தெரிவித்துள்ளார்.

நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகபட்ச கொள்ளளவை எட்டும் போது மேற்கொள்ள வேண்டிய மின்னுற்பத்தி தற்போது நடைபெற்று வருவதாகவும், தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் நீண்ட காலம் இவ்வாறு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் மின் நெருக்கடியால் மின்சாரம் துண்டிக்கப்படாமல் மக்களுக்கு மின்சாரத்தை வழங்கும் வகையில் விக்டோரியா மின்னுற்பத்தி நிலையம் அதிகபட்ச கொள்ளளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விக்டோரியா நீர்மின் நிலையத்தின் மூலம் நவம்பர் 29 முதல் ஜனவரி 12 வரை 191.279 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் கடைசி வாரத்தில் 722 மில்லியன் கனமீற்றராக இருந்த நீர்த்தேக்கத்தின் அதிகபட்ச கொள்ளளவு தற்போது 467 மில்லியன் கனமீற்றராகக் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கனியன் அனல்மின் நிலையத்துக்கு தண்ணீர் செல்லும் பைப் லைனில் பராமரிப்புப் பணிகள் நடப்பதால், அந்த மின் நிலையத்திலிருந்து பெறப்படும் 75 மெகாவோட் மின்சாரம் ஐந்து நாட்களுக்கு உற்பத்தி செய்யப்படவில்லை.

லக்ஸபான, பொல்பிட்டிய மற்றும் விமலசுரேந்திர நீர்மின் நிலையங்கள் அதிகூடிய மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகவும் பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

மத்திய மலையகத்தின் மேற்கு சரிவுகளில் நிலவும் வறட்சியான காலநிலையால் காசல்ரீ மற்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக வீழ்ச்சியடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலமைப்பரிசில் பரீட்சை குறித்த மேலதிக வகுப்புக்களுக்கு தடை

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை குறித்த மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்த நாளை நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இத்தகவலைத் தெரிவித்துள்ளது. அத்துடன், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை குறித்த மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தவும் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி நள்ளிரவு முதல் தடைவிதிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# ரூ.25 மில்லியன் பெறுமதியான போதைப்பொருட்கள் மீட்பு



நெதர்லாந்திலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட 4,000 போதை மாத்திரைகள் அடங்கிய பொதியொன்று சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொதியானது நெதர்லாந்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள நிலையில், மத்திய தபால் பரிமாற்றத்தில் வைத்து கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நெதர்லாந்திலிருந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவருக்கு அனுப்பப்பட்ட பார்சலில் போதைப்பொருள் ஒரு தொகுதி மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சுங்கப் பிரிவின் பேச்சாளர் தெரிவித்தார்.

பொதியின் அட்டைச் சுவரில் போதைப்பொருள் நுணுக்கமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், இது சுமார் 1,600 கிராம் எடையுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பொதியை பெறுவதற்காக மத்திய தபால் நிலையத்திற்கு வந்த வெள்ளவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை இலங்கை சுங்கப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். இந்தப் பொதி, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சுங்கப் பிரிவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடொன்றில் தமிழ் இளைஞருக்கு பிறப்பிக்கப்பட்ட மரண தண்டனை ஒத்திவைப்பு

சிங்கப்பூரில் ஹெரோயின் போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட நாகேந்திரன் கே.தர்மலிங்கத்தின் மரண தண்டனை கொவிட் பாதிப்பால் ஒத்திவைக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் வழக்கில் சிக்கிய இந்திய வம்சாவளியான நாகேந்திரனுக்கு கடந்த நவம்பர் 10 அன்று நிறைவேற்றப்படவிருந்த மரண தண்டனை ஒத்திவைக்கப்பட்டது.

மலேசியாவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி இளைஞர் நாகேந்திரன் கே.தர்மலிங்கம் கடந்த 2009 இல் சிங்கப்பூருக்கு ஹெரோயின் போதை மருந்து கடத்தி வந்ததற்காக கைதுசெய்யப்பட்டார்.

அவருக்கு 2010இல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. இதனைத் தொடர்ந்து, நாகேந்திரன் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கக் கோரிய மேன்முறையீடுகளும், ஜனாதிபதிக்கு அனுப்பிய கருணை மனுவும் நிராகரிக்கப்பட்டன.

கடந்த ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி நாகேந்திரனுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என சிங்கப்பூர் அரசு அறிவித்திருந்த நிலையில், நாகேந்திரன் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டமையினால் அவரது மரண தண்டனையை அந்நாட்டு உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்தது.

இந்நிலையில், மரண தண்டனையை எதிர்த்து நீதித்துறை மறுஆய்வு நடவடிக்கைகளை தொடங்க உயர் நீதிமன்றம் அனுமதி மறுத்த நிலையில், தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நாகேந்திரன் மனுதாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில், நாகேந்திரன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பு ஜனவரி 24 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுவை தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனன் மற்றும் நீதிபதிகள் ஆண்ட்ரூ பாங், ஜூடித் பிரகாஷ், பெலிண்டா ஆங் மற்றும் சாவ் ஹிக் டின் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரிக்கவுள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு - எக்ஸ்ரே பிரிவு திறந்துவைப்பு







(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவு என்பன நேற்று (16) திறந்து வைக்கப்பட்டன.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் திருமதி தயாழினி சசிகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

மேலும் அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன், சுகாதார சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் கொரோனா சிகிச்சை நிலையம், தீவிர சிகிச்சைப் பிரிவு, மனநோயாளர்கள் சிகிச்சைப் பிரிவு என்பவற்றினை சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன பார்வையிட்டார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவு என்பன மலேசியா அலகா பௌண்டேஷன், எமது சமூகம் நிறுவனம், அவுஸ்திரேலியா மெடிக்கல் எய்ட் பௌண்டேஷன் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் திறந்துவைக்கப்பட்டதாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் திருமதி தயாழினி சசிகுமார் தெரிவித்தார்.

# கலாபூஷணம் பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பணியை பாராட்டி பொன்விழா நிகழ்வு



(பாலமுனை நிருபர்)

கலாபூஷணம் பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பணியை பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பொன்விழா நிகழ்வு நேற்று முன்தினம் (15) பாலமுனை பொறியியலாளர் மர்ஹூம் எம்.சி.ஏ.அமீர் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி யூ.எல்.அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா, முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான நிப்கான் பதியுதீன், ஏ.எல்.தவம், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.தாஹீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை உதவி தவிசாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில், கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறை தலைவர் கலாநிதி செ.யோகராஜா, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எம்.றிபாஸ்தின், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, இலங்கை இறைவரித்திணைக்கள உதவி ஆணையாளர் எம்.எம்.முஸம்மில், முன்னாள் வலயக்கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம்.காஸிம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்ஸான் உட்பட உலமாக்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆளுமைகள், அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், கல்வியியலாளர்கள், கலை, இலக்கியப் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளினால் பாவேந்தல் பாறூக்கின் பொன்விழாவை முன்னிட்டு அவருக்கு நினைவுச்சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி, தலைப்பாகை அணிவித்து, வாழ்த்துப்பா இசைத்து கௌரவித்ததுடன், நாட்டில் மரணித்த எழுத்தாளர்களுக்கான ஆத்ம சாந்திக்காக மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கந்தளாய் குளக்கரையோரப் பகுதி சிரமதான நிகழ்வு



(கந்தளாய், மருதமுனை நிருபர்கள்)

கந்தளாய் பொலிஸ் (சமூக நல மற்றும் பாதுகாப்புப் பிரிவு) மற்றும் கந்தளாய் அல்-ஜாயா விளையாட்டுக்கழகம் என்பன இணைந்து ஏற்பாடுசெய்த சிரமதான நிகழ்வு, கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர் தலைமையில் நேற்று (16) இடம்பெற்றது.

இதன்போது குளத்தை அண்டிய கரையோரப் பகுதிகளில் பிரயாணிகளால் வீசப்படும் திண்மக் கழிவுகளை அகற்றி, குளப் பிரதேசத்தை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## போடியார் புலம்பல்.!



**மனிதனின் இதயத்துக்கு பதிலாக பன்றிர இதயத்த பொருத்தலாம் எண்டு வைத்தியர்கள் கண்டுபிடிச்சித்தாங்களாம்.**

**நம்ம நாட்டில பலருக்கு மனித மூளையே இல்லையே..! நரிட மூளைய எலுவா வைச்சிருக்காங்க..! அந்த மூளைக்கு பதிலாக குரங்கிட மூளையை வைச்சா நல்லா இன்னும் கட்சி தாவலாம் எலுவா..!**

# அளவை - நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடும் பணிகள்

(சீனக்குடா நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 2022 ஆம் ஆண்டுக்கான அளவை, நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திருகோணமலை மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் பொறுப்பதிகாரி பி.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இம்மாதம் 18, 19, 20 மட்டும் 21 ஆகிய திகதிகளில் கிண்ணியா பிரதேச செயலக கட்டடத்தில், காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணி வரையும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த பிரதேசங்களிலுள்ள கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், கமநல சேவைத் திணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் உபயோகிக்கும் சகல அளவை, நிறுவை உபகரணங்களையும் சரிபார்த்து முத்திரையிட்டு, வியாபாரிகள் தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளை சட்டரீதியாக ஆக்கிக்கொள்ள வேண்டும் எனவும், முத்திரை இடப்படாது, வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் மீது, 1995 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# புதுக்குடியிருப்பு அம்மன் அறநெறிப்பாடசாலையில் காணும் பொங்கல் - வள்ளுவர் பிறந்த தின நிகழ்வுகள்





(பாண்டிருப்பு நிருபர்)

மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு அம்மன் அறநெறிப்பாடசாலையில் நேற்று (16) காணும் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பிறந்த தினம் ஆகிய நிகழ்வுகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

அம்மன் அறநெறிப்பாடசாலையின் அதிபர் தி.நாகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆன்மீக அதிதியாக புதுக்குடியிருப்பு ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கோ.கிரிதரக்குருக்கள் கலந்துகொண்டார். அத்துடன் இந்துப்பிரசாரகர் அகரம் செ.துஜியந்தன் உட்பட அறநெறி ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இங்கு காணும் பொங்கல் பொங்கி கொண்டாடப்பட்டதுடன், சிவஸ்ரீ கோ.கிரிதர குருக்களினால் மாணவர்களுக்கு நல்லாசியும், சிறப்புப் பூஜை வழிபாடுகளும் நடைபெற்றன. அத்துடன் திருவள்ளுவரின் பிறந்த தினத்தையொட்டி மாணவர்களினால் திருக்குறள் ஒப்புவித்தல், திருவள்ளுவர் சிறப்புப்பேச்சு, மற்றும் பொங்கல் தினம் பற்றிய பேச்சு ஆகியனவும் நடைபெற்றன.

தமிழர்கள் நான்கு வகையான பொங்கலை கொண்டாடி மகிழ்கின்றனர். தைப்பொங்கலுக்கு முதல் நாள் போகிப்பொங்கல், அடுத்த நாள் தைப்பொங்கல், மறுநாள் பட்டிப்பொங்கல், அதற்கு அடுத்தநாள் காணும் பொங்கல் எனப் பொங்கலைப் பொங்கி மகிழ்கின்றனர். இதற்கமைய நேற்று (16) அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் காணும் பொங்கலை பொங்கி மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





(மட்டு. துஷாரா)

மட்டு. புதுக்குடியிருப்பு சித்த ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் தேசிய உற்பத்தித் திறனுக்காக பாடுபட்டு உழைத்த வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு என்பன நேற்று (16) குறித்த வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திருமதி ஜே.பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன், கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவு வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், கணக்காளர் என்.பாலநந்தன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.நவேந்திரராஜா உள்ளிட்ட வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த ஆண்டு அரச அலுவலகங்களில் வினைத்திறன் மிக்க சேவை மதிப்பீடு செய்யும் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் முதலாவது தடவையாக மட்டு. புதுக்குடியிருப்பு சித்த ஆயுர்வேத தள வைத்தியசாலை பங்குபற்றி அதில் விசேட பாராட்டுச் சான்றிதழை பெற்றுள்ளதையடுத்து, இதற்காக உழைத்த வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரைப் பாராட்டி சான்றிதழ்கள், இந்நிகழ்வின் பிரதம அதிதி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதர் ஆகியோரினால் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது, கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ரோட்டரி இலங்கை மாவட்ட ஆளுநர் அருணி திருமலை ரோட்டரி கழகத்துக்கு கள விஜயம்





(திருகோணமலை, கந்தளாய், கிண்ணியா நிருபர்கள்)

ரோட்டரி இலங்கை மாவட்ட ஆளுநர் அருணி மலலசேகர நேற்று முன்தினம் (15) திருகோணமலை ரோட்டரி கழகத்துக்கு விஜயம்செய்தார்.

ஆளுநரின் துணைச் செயலாளர் ஜெயக்குமார் மற்றும் உதவி ஆளுநர் டொக்டர் கருணாகரனும் அவருடன் இணைந்துகொண்டனர்.

திருகோணமலை ரோட்டரி கழகத் தலைவர் த.அகிலன் விருந்தினர்களை வரவேற்று, வரவேற்புரையை நிகழ்த்தினார். செயலாளர் க.பிரபாகரனால் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைகளின் அறிக்கை பற்றி ஒரு சுருக்கமான விளக்கத்தைக் கொடுத்தார்.

தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வெற்றியாளர் செல்வி எம்.அகன்ஷா ரொக்க விருது மூலம் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார். தலைவர் அகிலனால் புல்வெட்டும் இயந்திரம் ஒன்று திருவேலாயுதத்துக்கு வழங்கப்பட்டது.

தி/கணேச வித்தியாலயம் மற்றும் தி / தங்கபுரம் பாடசாலையின் தலைமையாசிரியர்கள் "கிராமப் பள்ளிகளுக்கு கணினி" என்ற திட்டத்தின் கீழ் கணினிகளைப் பெற்றுக்கொண்டனர். மேலும், 6 பாடசாலைகளுக்கு கணினிகள் உரிய நேரத்தில் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது. ஆளுநரின் துணைச் செயலாளர் ஜெயக்குமார் மாவட்ட ஆளுநர் அறிமுகப்படுத்தப்பட்டார்.

ஆளுநர் அருணி மலலசேகர, தமது உரையில் திருமலை ரோட்டரி கழக நடவடிக்கைகளை பாராட்டியதுடன், மேலும் இளம் உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டுமென கோரிக்கை விடுத்தார். புதிய திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு சிறந்த சேவை செய்வதுடன், மக்கள் மத்தியில் ரோட்டரி பெயரை எடுத்துச் செல்லவேண்டும் எனவும் எடுத்துரைத்தார். 2022 - 2023 ஆம் வருடத்துக்கான தலைவராக தெரிவுசெய்யப்பட்ட கிட்டினதாஸ் நன்றியுரை நிகழ்த்தினார்.

# விமர்சனங்களை என் வெற்றியாகவே பார்க்கிறேன்

## முஸாரப் முதுனபீன் எம்.பி. தெரிவிப்பு

(ஐ.எல்.எம்.நாஸிம்)

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஸாரப் முதுனபீன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்துரைத்த அவர், அம்பாறை மாவட்டத்தில் மக்களின் பிரச்சினைகள் மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது உழைத்துவிட்டு மக்களை ஏமாற்றும் அரசியல் அல்ல. மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மட்டுமே என்று தெரிவித்தார்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை மக்களின் பல நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட்டிருக்கின்றது. முக்கியமாக நான் ஓர் ஊடகவியலாளர். விமர்சனங்களே எனது வெற்றி. ஒரு மனிதன் சரியான பாதையில் பயணித்தால்தான் அதிக விமர்சனங்களை சந்திக்க நேரிடும். அதேபோன்றுதான் விமர்சனங்களை நான் என் வெற்றியாகவே பார்க்கிறேன் என்று மேலும் தெரிவித்தார்.



நான் தேர்தல் காலத்தில் கூறியது போன்றுதான் எனக்கு வழங்கப்படவுள்ள வாகன கோட்டாவை பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைத்து, அதில் தொழில் ஊக்குவிப்பை மேற்கொண்டு, அதில் வரும் இலாபத்தை கொண்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க எண்ணியுள்ளேன். ஒரு தொழிலுக்குப் போடும் முதல் அப்படியே இருக்கும். நான் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாமல் போனாலும் இதிலிருந்து வரும் இலாபம் மக்களுக்கு உதவ வேண்டும். அதிலிருந்து ஒரு ரூபாவும் எனக்குத் தேவையில்லை. இதற்காக நான் ஒரு குழுவை அமைக்க எண்ணியுள்ளேன்.

நான் பொத்துவில் மண்ணுக்கு மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர் அல்ல. அம்பாறை மாவட்டத்துக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர். கட்சி பேதங்களுக்கப்பால் என்னுடன் இணைந்து கொள்ளுங்கள். இது நமக்கான நேரம். தீர்வே முடிவு என அவர் தெரிவித்தார்.

# கல்முனை பிராந்தியத்தில் இரு வாரங்களில் 81 பேருக்கு கொரோனா தொற்று உறுதி



**தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டாலும் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து**

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த இரண்டு வாரங்களுக்குள் 81 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

புது வருடம் மற்றும் தைப்பொங்கல் விழாக்களின் பின்னரான கொரோனா தொற்றுநோய் தொடர்பான முன்னேற்ற அறிக்கை குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கையின் பிரகாரம், இதுவரை எதுவித தடுப்பூசிகளும் செலுத்தாத 18 பேரும், இரண்டு டோஸ் தடுப்பூசி மாத்திரம் செலுத்திக்கொண்ட 52 பேருக்கும், முதலாவது டோஸ் மட்டும் செலுத்திக்கொண்ட 9 பேருக்கும், மூன்று டோஸ் தடுப்பூசியையும் ஏற்றிக்கொண்ட 2 பேருக்கும் என 81 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 22, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய பிரிவில் -10, காரைதீவு -10, சாய்ந்தமருது - 7, அக்கரைப்பற்று - 7, அட்டாளைச்சேனை - 6, சம்மாந்துறை - 6, நிந்தவூர் - 5, இறக்காமம் - 4, பொத்துவில் - 2, நாவிதன்வெளி - 2 பேரும் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்களுக்கு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை மற்றும் வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

16 வயது முதல் 19 வயதுக்குட்பட்டவர்கள் 8 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் பாடசாலை மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டாலும் தொடர்ந்து சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவது கட்டாயமாகும். இது கொரோனா தொற்று நோய் மேலும் பரவுவதை தடுக்கும் என்றும் வைத்திய அதிகாரியினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அமான் அஷ்ரஃப் விசேட சந்திப்பு

(மாளிகைக்காடு நிருபர்)



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்துக்கு காரணகர்த்தாவாக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான கலாநிதி மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப்பின் புதல்வன் அஷ்ரஃப் அசோசியேட்ஸ் நிறுவனத் தலைவர் அமான் அஷ்ரஃப் நேற்று முன்தினம் (15)



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் விசேட சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

இச்சந்திப்பின் முக்கிய விடயமாக, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்து, அண்மையில் இலங்கையின் முதலாவது முஸ்லிம் அரசியல்துறை பேராசிரியராக பதவி உயர்வுபெற்ற, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதியான பேராசிரியர் எம்.எம்.பாஸில் எழுதிய "போருக்கு பிந்திய அரசும் சமூகமும்" மற்றும் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் பேராசிரியர் எம்.எம்.பாஸில் இணைந்து எழுதிய "கலாநிதி எம்.எச்.எம்.அஷ்ரஃப் நினைவுப் பகிர்வு" எனும் நூலை எம்.எம்.பாஸில், அமான் அஷ்ரஃப்புக்கு அன்பளிப்பு செய்தார்.

பேராசிரியர் எம்.எம்.பாஸில் எழுதிய "போருக்கு பிந்திய அரசும் சமூகமும்" நூல் இலங்கையின் மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தம் நாட்டின் அபிவிருத்தியை பெரிதும் பாதித்துள்ளது. 2009க்குப் பின்னர் சிவில் யுத்தம் முடிவுக்கு வந்தாலும், போருக்கு பிந்திய அரசும் சமூகமும் சமகால போக்கும் தொடர்பில் மிக அழகான முறையில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு தனது எழுத்தாக்கத்தை இந்நூல் மூலமாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

இந்நிகழ்வில் அமான் அஷ்ரஃப் பல்கலைக் கழகத்தின் அஷ்ரஃப் ஞாபகார்த்த நூலகத்திற்கு விஜயம்செய்து அங்கு அமையப்பெற்றுள்ள முன்னாள் நூலகர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் சேகரிப்பு பகுதியினையும், காப்பக சேகரிப்பு பகுதியையும் மற்றும் நூதனசாலையினையும் பார்வையிட்டார். அதன் பின்னர் நூலகர் எம்.எம்.றிபாயுத்தீனால் "இலங்கை முஸ்லிம்களை ஆராய்தல்" எனும் புத்தகமும் அமான் அஷ்ரஃப்புக்கு கையளிக்கப்பட்டது.

# காட்டு யானை தாக்குதலில் மீராவோடை இளைஞன் படுகாயம்

(மீராவோடை நிருபர்)

யானை தூக்கி வீசியதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவ





மொன்று நேற்று (16) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை தமிழ், பிரதான வீதியில் வைத்தே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடலுக்கு செல்வதற்காக துவிச்சக்கர வண்டியில் குறித்த வீதியால் சென்று கொண்டிருந்த சுங்கான்கேணி, எழுச்சி கிராமத்தை சேர்ந்த 23 வயதுடைய கே.சதீஸ்கரன் எனும் இளைஞன் மீதே காட்டு யானை இவ்வாறு தாக்கியுள்ளது.

குறித்த இளைஞனை யானை தூக்கி வீசியதில் இளைஞனின் கை மற்றும் நெஞ்சுப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இளைஞன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் அண்மைக்காலமாக யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும், மக்கள் பெரிதும் அச்சத்துடன் வசித்து வருவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## கிழக்கு பல்கலைக்கழகத்தில் 13 மாணவர்களுக்கு கொரோனா

(பதுர்தீன் சியானா)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் 13 பேர் கொரோனா தொற்று காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சல், இருமல் காரணமாக நேற்று முன்தினம் (15) திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வருகை தந்தபோது மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின் மூலம் தொற்று உறுதிசெய்யப்பட்டதாகவும் வைத்திய சாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அங்கு சில மாணவர்களுக்கு கொரோனா தொற்று பரிசோதனை செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீண்டும் திருகோணமலையில் தொற்று பரவி வருவதால் கடுமையாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறும் சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

# 64 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் தம்பலகாமத்தில் 18 பயனாளிகளுக்கு கையளிப்பு

(கிண்ணியா நிருபர்)






ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைய, வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரள கலந்துகொண்டு வாழ்வாதார உபகரணங்களை பயனாளிகளிடம் கையளித்தார்.

சௌபாக்கியா நான்காம் வாரத்தினை முன்னிட்டு சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மொத்தமாக 64 இலட்சம் ரூபா பெறுமதியான 18 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம், நீர் இறைக்கும் பம்பி போன்ற உபகரணங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் சித்திக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஆட்டுப்பால் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவிப்பு





மட்டக்களப்பு மாவட்டத்தில் பால் சேகரிப்பு நிலையங்கள் அதிகரிக்கப்படும். குறிப்பாக ஆட்டு பால் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. வெளிநாடுகளுக்கு ஆட்டுப்பால் உற்பத்திகள் ஏற்றுமதி செய்வதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் கிழக்கின் விவசாயம் சார்ந்த உற்பத்தித்துறையில் பாரிய அளவில் எழுச்சி ஏற்படும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கரடியனாறு ஆயர் குலம் கால்நடை பண்ணையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கரடியனாறு கால்நடை வைத்திய அதிகாரி பிரிவின் காரியாலயத்தில் இடம்பெற்ற மாட்டுப்பொங்கல் நிகழ்வில் நேற்று முன்தினம் (15) கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட எப்படி வாழக் கூடாது என்று வாழ்வியலை கற்றுக்கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்திருக்கிறது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும் உயர்வான எண்ணங்களையும் சமூகம் எனும் மணற்பரப்பில் கலை கலாசாரங்களாக விதைத்துச் சென்றிருக்கிறது என்பதே உண்மை. தமிழ் மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்படும் பண்டிகைகள் வாழ்வியல் தத்துவங்களை பெரிதும் உணர்த்துகின்றன. தமிழ் மக்களின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்த பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளில் மிக முக்கியமான பொங்கல் பண்டிகையை போகி, சூரிய பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாட்கள் நடைபெறும் திருவிழாவாக கொண்டாடுகின்றனர்.

கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான கால்நடைகள் காணப்படுவதுடன், எம்மவர் மத்தியில் இன்றும் வீடுகளில் வளர்க்கும் கால்நடைகளுக்கு கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாக மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. மாடு என்றால் செல்வம் என்று பொருள். பண்டைய மக்கள் தங்கள் வாழ்வில் பசுக்களையும் காளைகளையுமே சிறந்த செல்வங்களாகப் போற்றி வந்தனர். ஒரு நாட்டின் மீது படையெடுக்க விரும்பும் மன்னன், முதலில் பகை நாட்டின் பசுக் கூட்டங்களைக் கவர்ந்துவருவான். இதற்கு ஆநிரை கவர்தல் என்று பெயர். மாடுகளைக் களவாடக் கொடுத்தல் நாட்டையே கொடுத்ததற்குச் சமம். எனவே, பசுக்களைப் பகைவனிடம் பறிகொடுத்த மன்னன், பகைவனைத் தொடர்ந்து சென்று, அவனுடன் போர் செய்து பசுக்கூட்டங்களை மீட்டு வருவான். தமிழர்களின் புறவாழ்க்கை பற்றிய திணைப் பகுப்பு இப்படித்தான் தொடங்குகிறது. பெரும்போர்கள் அனைத்துமே மாடுகளைக் கவர்வதிலும் மீட்பதிலுமே தொடங்குகின்றன.

மாடுகள்தான் உண்மையான செல்வம் என்று அறிந்து அதைப் பாதுகாத்த பாரம்பரியம் தமிழர்களுடையது. நமது நாட்டின் கிழக்கு மாகாணத்திலேயே குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவான கால்நடைகள் காணப்படுகின்றன. நாம் இந்த கால்நடைகளின் ஊடாக உச்ச பயனை பெறுவதில்லை என்பதே உண்மை. இனி வரும் காலங்களில் கால்நடைகளின் ஊடாக விவசாயத் துறைக்கும் பால் உற்பத்தியாளர்களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் பாரிய வேலைத்திட்டங்கள் அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று நாட்டில் பால்மா தொடர்பில் பாரிய தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. நாம் வெளிநாடுகளில் இருந்து வரும் பால்மாவுக்கு அதிகளவான விருப்பம் தெரிவிக்கின்றோம். உள்நாட்டில் உள்ள பால் உற்பத்திக்கு விருப்பம் கொள்வதில்லை. உள்நாட்டில் உள்ள கால்நடைகளில் இருந்து கிடைக்கப்படும் தூய பசும்பாலை பருகும் பழக்கத்தை நம்மவர் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான கால்நடைகள் காணப்படுகின்றன. அந்த கால்நடைகளிலிருந்து கிடைக்கப்படும் பாலிலிருந்து உச்சப் பயனை பெறவேண்டும். எதிர்வரும் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பால் சேகரிப்பு நிலையங்கள் அதிகரிக்கப்படும். குறிப்பாக, ஆட்டு பால் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. வெளிநாடுகளுக்கு ஆட்டுப்பால் உற்பத்திகள் ஏற்றுமதி செய்வதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் எமது மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான உற்பத்தியாளர்களுக்கு தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படுகின்றது என்றார்.

# சாய்ந்தமருது அலிக்கான் எழுதிய 'நெஞ்சில் பூத்த நெருப்பு' கவிதை நூல் அறிமுகம்

(எம்.என்.எம்.அப்ராஸ்)





அல் - மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் வெளியீட்டகத்தின் வெளியீடாக வெளிவந்த அல் - மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் கலைப்பிரிவின் தலைவர் பல்துறை கலைஞர் சாய்ந்தமருது என். எம். அலிக்கான் எழுதிய "நெஞ்சில் பூத்த நெருப்பு" கவிதை நூல் அறிமுகம் அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல்.நூருல் ஹுதா உமரின் தலைமையில் கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் நேற்று முன்தினம் (15) இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அல் - மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் கலைப்பிரிவின் தலைவர், பல் துறை கலைஞர் சாய்ந்தமருது என்.எம். அலிக்கான் கடந்துவந்த பாதைகள் தொடர்பிலும் வைத்தியசாலையில் கடமையாற்றிய காலத்திலும் அதன் பின்னரான காலத்திலும் அவரது இலக்கிய செயற்பாடுகள் தொடர்பிலும், ஏனைய துறைசார்ந்த திறமைகள் தொடர்பிலும் இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்த கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப். ரகுமான் சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை தர நிர்ணய பிரிவின் பொறுப்பு வைத்தியர் ஏ.ஆர். எம்.ஹாரிஸ், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்தியர் எம்.எம்.எச். ஹபிலுள் இலாஹி, பொது மக்கள் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் ஏ.எல்.பாரூக், நிதியுதவியாளர் எஸ்.எல்.எம்.லாபீர், நிர்வாக உத்தியோகத்தர் கே.எல்.எஸ். பஹுஜியா, சிரேஷ்ட மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர் என்.எல்.எம்.தௌபிக், தாதிய அலுவலர்கள், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ மஜீத், இம்போர்ட் மிரர் வலையமைப்பின் முகாமையாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.வை.அமீர் உட்பட பலரும் கலந்துகொண்டதுடன், கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப்.ரகுமானுக்கு அல்- மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவினால் கௌரவிப்பும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இயங்காத நிலையில் காணப்படும் வெல்லாம் குளம் கிராமிய வைத்தியசாலை

## கட்டப்பட்டு 12 வருடங்களாக பூட்டப்படிருக்கும் கட்டடத்தைத் திறக்குமாறு மக்கள் கோரிக்கை




(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மஜீத் நகர், வெல்லாம் குளம் கிராம மக்கள் வைத்தியசாலையின்றி பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

2010 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கிராமிய வைத்தியசாலை இருந்தும், அப்பகுதி மக்களின் வைத்திய சேவையை பூர்த்திசெய்யாமல் வெறுமனே பூட்டியே காணப்படுகின்றது.

சுமார் 1500 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். வைத்திய சேவையைப் பெறுவது என்றால் 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிண்ணியா வைத்தியசாலைக்கே போக வேண்டியுள்ளது. முச்சக்கரவண்டிக்கு 1000 ரூபா கொடுத்து போக வேண்டியுள்ளது

இந்த வைத்தியசாலை இயங்கினால் நாம் ஏன் அவ்வளவு சிரமப்பட வேண்டும். அத்துடன் இவ்வைத்தியசாலை காடு மண்டிக் காணப்படுகிறது. வைத்தியசாலை உபகரணங்கள், தளபாடங்கள் என்பன கறையான் அரித்த நிலையில் வெளவால்கள் தங்குமிடமாக மாறி பாழடைந்து காணப்படுவதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல இலட்சம் ரூபாவை செலவுசெய்து நிர்மாணிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை பிரயோசனமற்றுக் கிடப்பதாகக் கூறுகின்றனர். தற்போது வரை வைத்தியசேவை வழங்காமல் பூட்டியிருக்கும் இதனை விரைவில் திறந்து வைத்திய சேவையை வழங்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஓட்டமாவடி ஆற்றில் மிதந்த சடலம்; படகுகளில் தேடும் பணிகள் தீவிரம்



(மீராவோடை நிருபர்)

ஓட்டமாவடி பாலத்தின் கீழுள்ள ஆற்றில் நேற்று முன்தினம் (15) பிற்பகல் 2 மணியளவில் சடலமொன்று மிதந்ததாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய தேடும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பாலத்தின் மீது நபரொருவர் சென்று கொண்டிருந்தபோது ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதைப் போன்று கண்டுள்ளார்.

அந்நபரின் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரின் உதவியுடன், கல்குடா சுழியோடிகள் இரு படகுகளில் அந்த சடலத்தைத் தேடும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆற்றில் மிதந்தது சடலம்தானா என தேடுதல் பணிகளில் ஈடுபட்டு வரும் சுழியோடிகள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் 17 ஆவது பேராளர் மாநாடு



(பாறுக் ஷிஹான்)

வடக்கையும், கிழக்கையும் இணைக்க எடுக்கும் எத்தகைய முயற்சியையும் வன்மையாகக் கண்டிப்பதாக பேராளர் மாநாட்டில், ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் கலாபூஷணம் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் 17ஆவது வருடாந்த பேராளர் மாநாடு அக்கட்சியின் தலைவர் கலாபூஷணம் முபாரக் அப்துல் மஜீத்தின் தலைமையில் கல்முனையில் நேற்று முன்தினம் (15) நடை பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இந்நிகழ்வில் கட்சிக்கு அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய பல்வேறு நிர்வாகிகள் கௌரவிக்கப்பட்டதுடன், புதிய நிர்வாகிகள் பலருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், நாடு முழுவதுமிருந்து வருகை தந்த பேராளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன், 17 புதிய தீர்மானங் களும் முன்வைக்கப்பட்டன.

# இயற்கையை நாம் பாதுகாத்தால் அது நம்மை பாதுகாக்கும்

## தைத்திருநாள் கொண்டாட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பபாகரன் தெரிவிப்பு



(வி.சுகிர்தகுமார்)

இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்மை பாதுகாக்கும். இதனாலேயே இயற்கையைப் பாதுகாப்பதோடு, இயற்கை தெய்வங்களுக்கு நன்றி தெரிவிக்கும் பாரம்பரியத்தை இந்து மதம் பின்பற்றி வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே இயற்கை தெய்வமான சூரியபகவானுக்கு நன்றி தெரிவிக்கும் தைத்திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது என ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்துமாமன்ற கட்டடத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள களப்பு நிலப்பரப்பு இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட கொடை. இதனை மண்ணிட்டு நிரப்பி இல்லாது செய்வதனால் எமது சந்ததி பாரிய பின்விளைவுகளை சந்திக்க நேரிடும். குறிப்பாக விவசாயிகள் இதனால் பெரும் சிக்கலை எதிர்கொள்வர்.

நமது பிரதேசத்தில் உள்ள சுமார் 8,600 ஏக்கர் நிலப்பரப்புள்ள விவசாயக்காணியின் வடிச்சல் நீரை சேமித்து வைக்கக்கூடிய ஒரே இடம் களப்பு மாத்திரமேயாகும். இதனை இல்லாது செய்வதால் வடிச்சல் நீரும் முற்றாக வெளியேறி பெரும் குடிநீர் தட்டுப்பாட்டினை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும். ஆகவேதான் இதுபோன்ற இயற்கை வளங்களை நாம் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

மன்றத்தின் தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியான பிரதேச செயலாளர் வரவேற்கப்பட்டார். பின்னர் குத்துவிளக்கேற்றப்பட்டதுடன், நந்திக்கொடியினையும் பிரதேச செயலாளர் ஏற்றிவைத்தார்.

இதேநேரம் நடைபெற்ற பொங்கல் பூஜை வழிபாடுகளிலும் பிரதேச செயலாளர் உள்ளிட்ட கலாசார உத்தியோகத்தர் நிசாந்தினி தேவராஜ் உள்ளிட்ட மன்றத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து செயலாளரும் அதிபருமான ஸ்ரீ மணிவண்ணன் அதிதிகளை வரவேற்று உரையாற்றியதுடன், மண்ணின் மைந்தன் ஒருவர் பிரதேச செயலாளராக இருப்பதையிட்டு பெருமிதம் கொள்வதாக கூறினார். மேலும், அவரோடு இணைந்து பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பங்காற்ற இந்து மாமன்றம் எவ்வேளையிலும் தயாராக இருப்பதாக கூறினார்.

தற்போதைய ஜனாதிபதி முன்னெடுத்துள்ள பசுமைப்புரட்சி மற்றும் சேதனப்பசளை மூலமான பயிர்ச்செய்கையினையே பல வருடங்களுக்கு முன்னர் நமது முன்னோர் பின்பற்றினர். இதனையே தற்போதும் பின்பற்றுகின்றனர் என மன்றத்தின் தலைவர் வே.சந்திரசேகரம் கூறினார். மேலும், உழவருக்கு உதவி செய்யும் சூரியபகவான் மற்றும் பசுக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் பாரம்பரியத்தையும் இந்துமதம் தற்போதும் கடைப்பிடித்து வருகின்றது என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# புதிய காத்தான்குடி பெரிய ஜும் ஆ பள்ளிவாசலில் முப்பெரும் விழா




(காத்தான்குடி)

ஹிக்மா அல்-குர்ஆன் மனன பீட மத்ரஸாவில் அல்-குர்ஆனை முழுமையான மனனம் செய்து நிறைவு செய்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, 2020 ஆம் வருடம் குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்தி சங்கத்தினால் நடத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, 2021 ரமழான் மாதம் நடைபெற்ற மாணவர்கள் மற்றும் பெண்களுக்கான விசேட மார்க்க விளக்க வகுப்பில் கலந்துகொண்டவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு ஆகிய முப்பெரும் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை (14) மாலை பள்ளிவாசலில் இடம்பெற்றன.

பெரிய ஜும் ஆ பள்ளிவாசலின் தலைவர் கே.எல்.எம்.பரீட் தலைமையில் இடம்பெற்ற இந்த முப்பெரும் விழாவில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேய்க் மௌலவி ஏ.ஜீ.எம்.அமீன் (பலாஹி) விசேட அதிதியாக கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்வியாளர்கள், பிரமுகர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என அதிகமானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கும்புறுமூலை கஜுவத்தை கடலில் மூழ்கிய சிறுவர்கள் இருவரும் சடலங்களாக மீட்பு



(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு - கல்குடா, கும்புறுமூலை கஜுவத்தை கடலில் கடந்த வெள்ளிக்கிழமை (14) நீரில் மூழ்கிக் காணமல்போன இரு சிறுவர்களும் நேற்று முன்தினம் (15) சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கிரான் பகுதியைச் சேர்ந்த ஏழு சிறுவர்கள் குறித்த கடலில் தைப்பொங்கல் தினமான 14 ஆம் திகதி நீராடிக் கொண்டிருந்தபோது, அவர்களில் மூவர் கடலில் மூழ்கியுள்ளனர்.

இவ்வாறு, நீரில் மூழ்கிய ஒருவர் காப்பாற்றப்பட்டதுடன், இருவர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தனர்.

காணாமல்போன இரு சிறுவர்களையும் தேடும் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் சனிக்கிழமை மாலை வரை தீவிரமாக இடம்பெற்று வந்தன.

இந்நிலையில், சனிக்கிழமை (15) பிற்பகல் 2.30 மணியளவில் கிரான் பகுதியைச் சேர்ந்த ச.அக்சயன் (வயது 16) எனும் சிறுவனும், அன்றைய தினம் மாலை 6.30 மணியளவில் கிரான் பிரதான வீதியைச் சேர்ந்த ஜீவானந்தா சுஜானந்தன் (வயது 16) எனும் சிறுவனும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நீரில் மூழ்கி மரணமடைந்த இரு சிறுவர்களின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் முதன்முறையாக நுண்கலை படைப்பாளர்களின் சிற்பம் - ஓவியக் கண்காட்சி




(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை நகரில் முதன்முறையாக நுண்கலைப் படைப்பாளிகளைக் கொண்டு உருவான சிற்பம், ஓவியம் சார்ந்த கலைப் படைப்புகளின் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (15) கலைஞர் எம்.சாஜித்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. துணியில் வரையப்பட்ட ஓவியங்களும், சிற்பங்களும் அதாவது நவீன ஓவியங்கள் வரை இந்த ஓவியக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், கலந்துகொண்ட கலைஞர் சாஜித் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்,

நானும், என்னுடைய சக நண்பர்களையும் உள்ளடக்கி இக்கண்காட்சியை ஒழுங்குபடுத்தி இருந்தோம். மேலும், இக்கண்காட் சியின் முக்கிய நோக்கம் திருகோணமலை மாவட்டத்தில் சித்திர, சிற்ப அறிவை மக்களிடத்தில் கொண்டு செல்வதாகும். மேலும், சித்திரக்கலை என்பது ஒன்றைப் பார்த்து வரைவதல்ல. அது ஒரு போட்டோ பிரதி வேலைசெய்வது போன்றதே. ஆனால், ஒரு ஓவியம் ஒரு கலைஞன் மனதிலிருந்து வந்து ஓவியமாக வரவேண்டும் என்றார்.

கண்காட்சியைப் பார்வையிட வந்த ஆசிரியர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், இங்கு வைக்கப்பட்டுள்ள ஓவியம் மிகவும் நுட்பமான முறையில் முழு கலை சிந்தனையுடன் தத்ரூபமாக வரையப் பட்டுள்ளதுடன், இவ்வாறான கலைஞர்கள் வரவேற்கப்பட வேண்டும் எனவும், சமூகத்தில் சிறந்த அங்கீகாரம் கிடைக்க அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் எனவும், பாடசாலை மட்டத்தில் சித்திரக்கலை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தமை கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரியாக நிந்தவூர் பொலிஸ் பரிசோதகர் அலியார் றபீக் பதவியுயர்வு



(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நிந்தவூரைச் சேர்ந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் அலியார் றபீக் (Chief Police Inspector) பதவியுயர்வு பெற்று தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான ஏ.றபீக் பொலிஸ் சேவையில் கடந்த 33 வருடங்களாக பாதுகாப்புத்துறையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய, நிர்வாகத்துறையில் ஆளுமையுள்ள ஒருவராவார்.

இலங்கையின் பொலிஸ் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் இவர், நாட்டின் பல பாகங்களிலும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியுள்ளதோடு, நாட்டின் பல பொலிஸ் நிலையங்களில் பல முக்கிய பிரிவுகளில் பதவியமர்த்தப்பட்டு திறம்பட சேவையாற்றி பொலிஸ் உயர் அதிகாரிகளின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

அந்த வகையில் தனது ஆரம்ப பொலிஸ் சேவையைக் கொழும்பிலும் பின்னர் மொனராகலை, தனமல்வில, வீரக்கொடையிலும் குறிப்பாக பயங்கரவாதம் தலைதூக்கிய அச்சந்தர்ப்பத்தில் தாய் நாட்டுக்காக தன்னை அர்ப்பணித்து நாட்டின் பல பாகங்களிலும் கடமையாற்றியிருந்தார்.

அத்தோடு தங்காலையில் உப பொலிஸ் பரிசோதகராகவும், (SI) அதன் பின்னர் வெல்லவாயவில் பொலிஸ் பரிசோதகராக (IP)பதவி உயர்வு பெற்று அங்கு கடமையாற்றியதோடு பின்னர் முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசால் காஸிம் எம்.பியின் மெய்ப்பாதுகாவலராக எட்டு வருடங்கள் கடமையாற்றியதோடு, இறுதியாக கல்முனை பொலிஸ் நிலையத்தில் கல்முனை நீதிமன்றத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

தனது சேவைக்காலத்தில் பொலிஸ் நிர்வாகப் பிரிவில் கூடிய அனுபவம் வாய்ந்தவராக காணப்படுவதோடு, சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் நிர்வாகப்பிரிவு (Administrative Unit) பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய நிலையிலேயே கடந்த 2020.05.08ஆம் திகதியன்று பிரதம பொலிஸ் பரிசோதகராக அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

முன்னாள் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக செயற்பட்ட கே.எச். சுஜீத் பிரியந்த இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து நிலவிய பதவி வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.





திருகோணமலை - சம்பூர் பகுதியில் நேற்று முன்தினம் (15) பட்டிப்பொங்கல் இடம்பெற்றது. மாடுகளை வளர்ப்போர் தமது வீடுகளில் புதுப் பானைகளில் பொங்கல் பொங்கி, மாடுகளை நீராட்டி, கழுத்தில் பலகாரங்களைத் தொங்கவிட்டு, பூஜைகளைசெய்து, பட்டிப்பொங்கலைக் கொண்டாடினர்.

(படங்கள்:- எப்.ஆர்.எம்.பர்ஹான்)

# இந்திய செய்திகள்

# இந்தியாவில் 24 மணி நேரத்தில் 2.71 இலட்சம் பேருக்கு கொரோனா

இந்தியாவில் நேற்று 24 மணி நேரத்துள் 2,71,202 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதுடன் 314 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான 15 இலட்சத்து 50 ஆயிரத்து 377 பேர் இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் இந்தியாவில் இதுவரை 7,743 பேருக்கு ஒமிக்ரொன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

**தமிழகத்தில் முழு ஊரடங்கு: போக்குவரத்து முடக்கம்!**

கொரோனா பரவலைத் தடுக்கும் நடவடிக்கையாக நேற்று தமிழ்நாடு முழுவதும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் முடக்கப்பட்டன.

**தமிழகத்தில் முழு ஊரடங்கு**



முழு ஊரடங்கையொட்டி நாகர்கோவிலில் முதன்மையான சந்திப்புகளில் பொலிஸார் தடுப்புகள் அமைத்து வாகனச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வீதிகளில் வாகனப் போக்குவரத்தும் ஆள் நடமாட்டமும் இன்றி காணப்படுகிறது.

தமிழக - கேரள எல்லையான களியக்காவிளை சோதனைச் சாவடியிலும் வாகனங்கள் சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றன. கன்னியாகுமரி, திற்பரப்பு உள்ளிட்ட சுற்றுலாத் தலங்கள் அனைத்தும் ஆள்நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்படுகின்றன.

முழு ஊரடங்கையொட்டி கடலூர் மாவட்டத்தில் 52 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து 1600 காவலர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். புதுச்சேரியிலிருந்து அத்தியாவசியத் தேவையின்றி வருவோரை பொலிஸார் திருப்பி அனுப்பி வருகின்றனர்.

அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளதால் வீதிகள் வாகனப் போக்குவரத்து, ஆள் நடமாட்டம் இன்றிக் காணப்பட்டன.

**பொன்னம்பல மேட்டில் தோன்றிய மகரஜோதி**

## விண்ணை முட்டிய சரண கோஷம்; பக்தி பரவசத்துடன் பக்தர்கள் தரிசனம்



*(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)*

சபரிமலையில் மகரஜோதி தோன்றியதையடுத்து மலைகளில் காத்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் தை முதல்நாளில் சபரிமலை ஐயப்பன் கோவிலில் மகரஜோதி நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டிற்கான மகரஜோதி நிகழ்ச்சி சபரிமலையில் வெள்ளிக்கிழமை மாலை விமர்சையாக நடைபெற்றது. சபரிமலையின் பொன்னம்பல மேட்டில் தோற்றும் மகரஜோதியை தரிசித்தால் செல்வங்கள் சேரும், பாவங்கள் தொலையும் என்பது ஐயப்ப பக்தர்கள் நம்பிக்கை.

இதனால் கொரோனா விதிமுறைகள் கடுமையாக கடைபிடிக் கப்பட்டுவந்தபோதும், மகரஜோதி தரிசனத்துக்காக மட்டும் திருவிதாங் கூர் தேவசம் போர்டும் கேரள அரசும் அதிகளவில் பக்தர்களை அனுமதித்துள்ளது. அதன்காரணமாக சபரிமலையில் இந்த ஆயிரக் கணக்கில் பக்தர்கள் குவிந்தனர். சபரிமலை சன்னிதானம் மட்டுமின்றி, பம்பா, நீலிமலை உள்ளிட்ட அனைத்து மலைப்பகுதிகளிலும் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் தரிசனத்துக்காகக் காத்திருந்தனர்.

சுவாமி ஐயப்பனுக்கு பந்தளராஜா அரண்மனை ஆபரணங்கள்



அணிவிக்கப்பட்டன. அதை தொடர்ந்து சிறப்பு பூஜையினை தொடர்ந்து தீபாராதனை காட்டப்பட்டது. இதனையடுத்து சரியாக வெள்ளிக்கிழமை மாலை 6.50 மணிக்கு பொன்னம்பலமேட்டில் ஜோதி வடிவில் ஐயப்பன் காட்சியளித்தார். ஜோதியை கண்ட பக்தர்கள் பக்தி பரவசத்தில் ஸ்வாமியே சரணம் ஐயப்பா என்று சரண கோஷமிட்டு தரிசித்தனர். மூன்று முறை தொடர்ந்து மகர ஜோதியை பக்தர்கள் தரிசித்தனர். அப்போது சுவாமியே சரணம் ஐயப்பா என்ற சரண கோஷம் எழுப்பி பக்தி பரவசம் அடைந்தனர். சன்னிதானம், பம்பை உள்ளிட்ட 8 இடங்களில் இருந்து மகர ஜோதியை பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பக்தர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்த ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை சபரிமலையில் சுவாமி ஐயப்பனுக்கு தங்கத்தினாலான ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு பந்தள ராஜகுமாரனாக அரசக்கோலத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். அதனைத் தொடர்ந்து தீபாராதனை தொடங்கியது. பின்னர் மகா தீபாராதனை காட்டப்பட்டது.

அப்போது வானில் மகர நட்சத்திரமாக ஐயப்பன் தோன்றியதாக ஐதீகம். அதேநேரத்தில் பொன்னம்பல மேட்டில் மகர ஜோதி பிரகாசமாக தோன்றியது. அது ஐயப்பனின் ஜோதிவடிவம் என்பது பக்தர்கள் நம்பிக்கை. ஜோதியின்போது, 'சுவாமியே சரணம் ஐயப்பா' என்ற சரண கோஷங்களால் விண்ணை முட்டியது.

# எம்.ஜி.ஆரின் 105ஆவது பிறந்தநாள் இன்று

## தமிழக அரசு சார்பில் மரியாதை



முன்னாள் தமிழக முதலமைச்சர் 'பாரத ரத்னா' டொக்டர் எம்.ஜி.ஆரின் 105ஆவது பிறந்த நாள் இன்றாகும்.

பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று காலை 10.00 மணியளவில் சென்னை, கிண்டி, தமிழ்நாடு டொக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசு சார்பில், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச உயர் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தவுள்ளனர்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில்,

தமிழக மக்களால் 'மக்கள் திலகம்' என்றும் 'புரட்சித்தலைவர்' என்றும் அன்புடன் அழைக்கப்படும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் கண்டி, நாவலப்பிட்டியில் 1917ஆம் ஆண்டு ஜனவரி 17இல் பிறந்தார்.

தனது சிறுவயது முதற்கொண்டு நாடகத்தில் நடிக்கத் தொடங்கி பின்னர் இத்துறையில் நல்ல அனுபவம் பெற்றுத் திரைத்துறைக்குச் சென்றார். 1936ஆம் ஆண்டு சதிலீலாவதி என்னும் திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி, தொடர்ந்து சிறிய வேடங்களில் நடித்து வந்தாலும், 1950ஆம் ஆண்டு கருணாநிதி திரைக்கதை வசனம் எழுதிய மருதநாட்டு இளவரசி மற்றும் மந்திரிகுமாரி திரைப்படங்களின் வாயிலாகத் திரையுலகில் தனக்கென்று ஒரு தனியிடம் பெற்றதோடு, தொடர்ந்து 30 ஆண்டுகள் தமிழ்த் திரைப்பட உலகின் முடிசூடா மன்னனாக விளங்கினார் என்றால் அது மிகையாகாது.

அவர் நடித்த பல படங்களுக்கு தேசிய விருதுகளும், தமிழக அரசின் சார்பில் 'அண்ணா விருது'ம் வழங்கி கௌரவப்படுத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணாவால் 'இதயக்கனி' என்றும், கருணாநிதியால் வழங்கப்பட்ட 'புரட்சி நடிகர்' என்கிற பட்டமே பின்னாளில் 'புரட்சித் தலைவர்' என்று நிலை பெற்றது. அன்னாரின் அளப்பரிய மக்கள் சேவையினைப் பாராட்டி, அவரின் மறைவுக்குப் பின் இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பாரத ரத்னா' வழங்கி சிறப்பிக்கப்பட்டார்.

தொடக்கத்தில் காந்தியவாதியாகத் திகழ்ந்தாலும், தந்தை பெரியார், பேரறிஞப் பெருந்தகை ஆகியோரின் திராவிடச் சிந்தனையாலும், கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டு, 1953ஆம் ஆண்டு தன்னைத் திராவிட இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். தான் நடித்த திரைப்படங்களிலும் திராவிடக் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துரைத்தார். 1962ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராக, சிறுசேமிப்புத்திட்டத் துணைத்தலைவராக, 1967ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக, 1969இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக, கருணாநிதியின் உற்ற நண்பராகத் தனது அரசியல் வாழ்வினைத் தொடங்கியவர், பின்னாளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற தனி இயக்கம் கண்டு, 1972ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் பெற்ற வெற்றியினைத் தொடர்ந்து 1977ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதல் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். 1977 முதல் 1987 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 10 ஆண்டுகள் மூன்று முறை தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்தார்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் ஏழை எளியோர் நலம் பெறுகின்ற வகையில், நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தினார். இன்றளவும் ஐக்கிய நாடுகள் சபையால் போற்றப்பட்ட சத்துணவுத்திட்டம், தமிழ் மீது கொண்டிருந்த மாறாதப் பற்றின் காரணமாக அவர் நடத்திய 5ஆம் உலகத்தமிழ் மாநாடு, 1981ஆம் ஆண்டு தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கம், பள்ளி மாணாக்கர்களுக்கு இலவச சீருடை, காலணி மற்றும் பற்பொடி வழங்கும் திட்டங்கள், முதியோருக்கு இலவச வேட்டி சேலை வழங்கிடும் திட்டம், சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

அரசியலில் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தாலும், தன் வாழ்நாளின் இறுதிவரையில் கருணாநிதியுடனான உயர்ந்த, உன்னதமான நட்பினை என்றும் போற்றி வந்தவர். அன்னாரைப் பெருமைப்படுத்துகின்ற வகையில், கருணாநிதி, 17.01.1990 அன்று சிறப்பு அஞ்சல் தலை வெளியிட்டார். அந்த விழாவிலே, "தனிப்பட்ட முறையிலே எனக்கும் எனதருமை நண்பர் எம்.ஜி.ஆருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், எனக்கும் அவருக்குமான நட்புணர்வை, என்னையும் அவரையும் மிகச் சரியாகப் புரிந்து கொண்டவர்களால் மட்டுமே தெரிந்திருக்க முடியும்'' என்று நட்புணர்வோடு குறிப்பிட்டார்.

மேலும், சென்னை கிண்டியில் அவரால் உருவாக்கப்பட்ட மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு டொக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டியதோடு, அன்னாரின் திருவுருவச்சிலையினையும் 1998ஆம் ஆண்டு திறந்து வைத்துப் பெருமை சேர்த்தார்.

முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா டொக்டர் எம்.ஜி.இராமச்சந்திரனின் நினைவினைப் போற்றுகின்ற வகையில், அன்னாரின் 105ஆவது பிறந்த நாளானது (ஜனவரி17) தமிழக அரசின் சார்பில் சென்னை கிண்டியிலுள்ள தமிழ்நாடு டொக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் லதா மங்கேஷ்கர்



பிரபல திரைப்படப் பாடகி லதா மங்கேஷ்கர் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

92 வயதான அவர் கடந்த வாரம் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு, மும்பை பிரீச் கேண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய மருத்துவமனை இணைப் பேராசிரியர் பிரதித் சம்தானி,

''லதா மங்கேஷ்கர் மேலும் சில நாட்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து கண்காணிக்கப்படுவார்.

வயது மூப்பு காரணமாக அவருக்கு தொடர்ச்சியான சிகிச்சை தேவைப்படுகின்றது. அதனால் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்''- என தெரிவித்தார்.

## வெள்ளை சேலை உடுத்தி பொங்கல் வைத்த பெண்கள்

**ஒரு எலுமிச்சை ரூ.40,001 கரும்பு ரூ.17,301க்கு ஏலம்**



சிவகங்கை அருகே பொங்கல் விழாவில் பெண்கள் வெள்ளை சேலை உடுத்தி பொங்கல் வைத்தனர்.

சிவகங்கை அருகே மதகுபட்டி கீழத்தெரு, மேற்குத்தெரு, சலுகைபுரம் பகுதிகளில் அதிகளவில் ஒரு சமூகத்தினர் வசிக்கின்றனர். இவர்கள் தனித்தனியாக காவல் தெய்வங்களாக பிடாரி அம்மன், பொன்னழகி அம்மனை வணங்கி வருகின்றனர். நேற்றுமுன்தினம் மாட்டு பொங்கலையொட்டி, தனித்தனியாக பெண்கள் வளையல், மெட்டி, கொலுசு தவிர்த்து வெள்ளை சேலை உடுத்தி அம்மனுக்கு பொங்கல் வைத்தனர்.

அம்மனுக்கு நேர்த்திக்கடனாக கரும்புத் தொட்டில் கட்டினர். தொடர்ந்து காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன. இளைஞர்கள் காளைகளை அடக்கினர். விழா முடிந்ததும் மாலையில் மேலத்தெரு, கீழத்தெருவில் நேர்த்திக்கடன் கரும்புகள், விரதமிருந்து அம்மன் காலடியில் வைத்த எலுமிச்சை ஆகியவற்றை ஏலம் விட்டனர்.

இந்த ஏலத்தில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி பல்வேறு பகுதிகளில் இருந்தும் பங்கேற்றனர்.

கரும்பு, எலுமிச்சையை ஏலம் எடுத்தால் நினைத்த காரியம் கைகூடும் என்பது அப்பகுதி மக்களின் நம்பிக்கை. இதனால் அவற்றை போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். மேலத்தெருவில் கரும்பொன்று அதிகபட்சமாக ரூ.17,301இற்கும், கீழத்தெருவில் எலுமிச்சையொன்று ரூ.40,001இற்கும் ஏலம் விடப்பட்டது.

## 75, 78, 80 கிலோ எடைகளை சர்வ சாதாரணமாக தூக்கும் சமந்தா




விவகாரத்து விவகாரம், புஷ்பா பாடல் என கடந்த சில வாரங்களாக நடிகை சமந்தா மிக பரபரப்பாக பேசப்பட்டு வருகிறார். சமந்தா உடற்பயிற்சி கூடத்தில் பயிற்சி செய்யும் வீடியோ பகிர்ந்து வருகிறார்.

இந்நிலையில், அவர் 78 கிலோ முதல் 80 கிலோ வரை எடை தூக்கும் வீடியோவை பகிர அவை இணையதளங்களில் வைரலாகி வருகின்றன. பலரும் சமந்தாவின் முயற்சி தங்களுக்கு முன்மாதிரியாக இருப்பதாக கருத்து தெரிவித்து வருகின்றனர்.

நடிகை சமந்தா தற்போது விஜய் சேதுபதி, நயன்தாராவுடன் இணைந்து 'காத்து வாக்குல ரெண்டு காதல்' படத்தில் நடித்துள்ளார். இந்தப் படம் விரைவில் வெளியாகவுள்ளது. மேலும், தெலுங்கில் 'சகுந்தலம்', 'யசோதா' உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார்.

## பஸ் சாரதிக்கு திடீர் வலிப்பு; பஸ்ஸை செலுத்திய பெண்





பஸ் சாரதிக்கு வலிப்பு ஏற்பட்டதால், பெண்ணொருவர் 10 கிலோ மீற்றர் தூரம் பஸ்ஸை ஓட்டிச் சென்றுள்ளார்.

மஹாராஷ்டிராவின் புனே மாவட்டத்தில் சமீபத்தில் மினி பஸ்ஸில் ஷிரூர் பகுதியிலுள்ள வேளாண் சுற்றுலா மையத்திற்கு 20இற்கும் மேற்பட்ட பெண்கள், தங்கள் குழந்தைகளுடன் சுற்றுலா சென்றனர். சுற்றுலா முடித்து ஊர் திரும்பியபோது சாரதிக்கு திடீரென வலிப்பு ஏற்பட்டுள்ளது.

வீதியிலேயே வண்டியை அவர் நிறுத்தினார். பஸ்ஸில் பயணித்த யோகிதா சதாவ் என்ற 42வயதான பெண், சிறிதும் தயங்காமல் சாரதியின் இருக்கையில் வந்து அமர்ந்தார். பஸ்சை சாதுர்யமாக இயக்கி அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று நிறுத்தினார்.

இதனையடுத்து சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்பின் 10 கி.மீ., தூரம் பஸ்ஸை ஓட்டிச் சென்ற யோகிதா, இதர பயணியரை பாதுகாப்பாக இறக்கி விட்டார். யோகிதாவின் இந்த செயலுக்கு தற்போது பாராட்டுகள் குவிந்து வருகின்றன.



# வெடித்துச் சிதறிய டொங்கா கடலடி எரிமலை

## 7.4 ரிச்டர் நிலநடுக்கத்தையடுத்து அண்டை தீவுகளை தாக்கிய சுனாமி

## விண்ணை மறைத்த கரும் புகை; இரவான பகல்; பேரலை பீதியில் 1.06 இலட்சம் மக்கள்



## அமெ., - ஆஸி., - நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளை தாக்கிய அலை - அதிர்வும் பதிவு

உலக செய்திகள்

## அண்டை நாடான இந்தியாவிலும் உணரப்பட்ட அதிர்வலை

பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான டொங்காவில்(Tonga) கடலுக்கு அடியில் எரிமலையொன்று வெடித்து சிதறியுள்ளது. இந்த எரிமலை வெடிப்பு 7.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து அந்தத் தீவுகளை சுனாமி அலை தாக்கியுள்ளது.

அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் சுனாமி அலைகள் தாக்கியுள்ளன.

சனிக்கிழமையன்று போர்ட் சான் லூயிஸில் 4.1 அடி உயர அலைகள் பதிவாகியுள்ளன, மேலும் கலிபோர்னியா, ஓரிகான், வொஷிங்டன், பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் அலாஸ்கா, ஹவாய் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் சுனாமி-விளைவு அலைகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை எமது அண்டை நாடான இந்தியாவிலும் டொங்கா தீவில் வெடித்து சிதறிய எரிமலையினால் ஏற்பட்ட அதிர்வலைகள் பதிவாகியுள்ளன. சென்னையிலுள்ள பாரா மீற்றர் கருவிகளிலும் பதிவாகியுள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது.

டொங்காவில் சுனாமி தாக்கியதையடுத்து அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரை பகுதிகள், குறிப்பாக டாஸ்மானியா உள்ளிட்டப் பகுதிகளிலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிமலை வெடித்துச் சிதறிய சத்தம் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிஜி தீவுகள் உள்ளிட்ட நாடுகளிலும் கேட்டுள்ளது.

இந்த எரிமலைச் சீற்றத்தின் விளைவாக டொங்காவிலும், ஃபிஜி தீவிலும் சுனாமி அலை எழுந்தது. தெற்கு ஜப்பானின் பசுபிக் கடற்கரையை ஒட்டிய தீவுப்பகுதிகளான அமாமி - ஓஷிமா தீவுப் பகுதிகளிலும் சுனாமி அலை உருவானது.

நள்ளிரவு 12.15 மணிக்கு ஞாயிற்றுக்கிழமையன்று, அமாமி தீவுப்பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து, கோமினாட்டோ பகுதிகளில் 120 மீற்றர் உயரமுள்ள சுனாமி அலைகள் எழுந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபோலவே, ஜப்பானின் பசுபிக் கடற்கரையில் அமைந்துள்ள மற்றொரு தீவுப் பகுதியான கையூஷுவில் 90 மீற்றர் உயரமுள்ள 12 இற்கும் மேற்பட்ட சுனாமி அலைகள் எழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சம்பவங்களில் உயிராபத்துக்கள் ஏற்பட்டதற்கான உடனடி தகவல் இல்லை.

நிலைமையைத் தொடர்ந்து கவனித்து வருவதாகவும் தேவைப்பட்டால் டொங்கா தீவுக்குச் சென்று உதவத் தயாராக இருப்பதாகவும் நியூஸிலாந்து இராணுவம் தெரிவித்தது.

முன்னதாக, எரிமலைச் சீற்றத்தைத் தொடர்ந்து டொங்கா, ஃபிஜி தீவுகள் மட்டுமன்றி, சமோவா, நியூசிலாந்து, அமெரிக்கா, கனடா, சிலி ஆகிய நாடுகளிலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பசுபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள தீவு நாடுகளில் ஒன்று டொங்கா. மொத்தம் 177 சிறு தீவுகளைக் கொண்ட இந்த நாட்டின் மொத்த மக்கள்தொகையே ஒரு இலட்சத்து 6 ஆயிரம் மட்டும்தான். இதன் நிலப் பகுதியிலும், கடலிலும் ஏராளமான எரிமலைகள் உள்ளன.

இவற்றில் ஒன்றின் பெயர், 'டொங்கா ஹுங்கா ஹா'பைய்' (The Hunga Tonga Hunga Ha'apai volcano) என்பதாகும். மிகவும் பாரிய எரிமலையான இதன் பெரும்பகுதி, பசுபிக் பெருங்கடலுக்கு அடியிலிருக்கிறது.

இது செயலற்ற நிலையிலிருப்பதாக கூறப்பட்டு வந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

அதையடுத்து, எரிமலையின் நெருப்பு மற்றும் சாம்பல் என்பன கடலுக்கு வெளியே எழுந்துள்ளன. கண்களைப் பறிக்கும் அந்தக் காட்சியை டொங்கா தீவிலிருந்த பலர் கண்டுள்ளனர்.

இந்த எரிமலை வெடித்துச் சிதறும் சத்தம் தென்பசுபிக் பிராந்தியம் முழுவதும் கேட்டுள்ளது. அதாவது நியூசிலாந்து, அவுஸ்திரேலிய மக்கள் இந்த சத்தத்தைக் கேட்டுள்ளனர். டொங்காவிலிருந்து 800 கி.மீ. தொலைவிலிருந்த ஃபிஜியிலும் எரிமலை வெடிக்கும் சத்தம் கேட்டுள்ளது.

கடலுக்குள் எரிமலை வெடித்துச் சிதறியவுடனேயே சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், மக்கள் பாதுகாப்பான







இடங்களுக்குச் செல்வதற்குள், எல்லா இடங்களிலும் புகையும், சாம்பலும் சூழ்ந்தன. கடல் நீர் ஊருக்குள் புகுந்துள்ளது.

இது குறித்து அப்பகுதியைச் சேர்ந்த மெர் டாஃப் என்பர் தெரிவிக்கையில்,

''நான் ஏதோ வெடிகுண்டு வெடித்தது என்றே நினைத்தேன். ஆனால், அப்புறம் தான் நிலைமையை உணர்ந்தோம். என் தங்கையை தூக்கிக் கொண்டு மேசைக்கடியில் தஞ்சம் புகுந்தேன்'' என்றார்.

**டொங்கா தீவு**

அவுஸ்திரேலியாவிற்கு வலது பக்கத்தில் தென் பசுபிக் கடலில் அமைந்துள்ள தீவு தேசம்தான் டொங்கா. பழங்குடியின மக்கள் அதிகம் கொண்ட, இயற்கை எழில் கொஞ்சும் கடல் தேசம் இது. நான்கு பக்கமும் சுற்றி கடலிருக்கும் அழகான சுற்றுலா தேசம் ஆகும்.

இந்த நிலையில்தான் டொங்காவில் எரிமலை வெடிப்பு காரணமாக அங்கு பாரிய சுனாமி அலை ஏற்பட்டுள்ளது.

டொங்கா தலைநபர் நுகுஆலோபா அருகே இந்த சுனாமி ஏற்பட்டுள்ளது. தலைநகரின் பெரும்பாலான பகுதிக்குள் கடல் நீர் புகுந்து வீடுகள் மூழ்கின.

ஹுங்கா டோங்கா என்ற பிரபல எரிமலை பெரியளவில் வெடிக்கும் தறுவாயில் இருக்கின்றது. இந்த எரிமலை கொஞ்சம் கொஞ்சமாக வெடித்து வருகிறது. தற்போது அது செயலற்ற நிலையில் இருப்பதாக கூறப்பட்டு வந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்தது சிதறியது.

எரிமலை வெடிப்பு கடலுக்குள் உள்ளே அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனால் திடீரென கடல் அலைகள் மேலே எழுந்து சுனாமி ஏற்பட்டது. எரிமலை வெடிப்பு காரணமாக உருவான அதிர்ச்சி அலைகள் காரணமாக கடல் கொந்தளித்து சுனாமி ஏற்பட்டுள்ளது.

**அதிர்ச்சி தரும் சம்பவங்கள்**

இந்த எரிமலை வெடித்த அந்த நொடிக்கும், சுனாமி ஏற்பட்டதற்கு இடையில் இரண்டு அதிர்ச்சி தரும் சம்பவங்கள் டொங்காவில் இடம்பெற்றுள்ளன.

முதல் விடயம்: அங்கு எரிமலை வெடித்ததும் திடீரென கரும்புகை போன்ற புழுதி வானத்தை முழுவதுமாக மறைத்திருக்கிறது. இதனால் சூரியனை சுற்றி புகைமண்டலம் ஏற்பட்டுள்ளது. இது அப்படியே டொங்காவை இருளாக மாற்றியுள்ளது. பட்டப்பகல் அப்படியே சில நிமிடங்களில் நடு இரவு போன்று மாறி இருக்கிறது.

இதைப் பார்த்து அங்கிருந்த மக்கள் எல்லோரும் குழம்பிப்போய் இருக்கிறார்கள். அந்நாட்டு மக்கள் பலர் வானத்தில் இருந்து புழுதி, தூசுகள், சாம்பல்கள் மழை போல கொட்டியதாக குறிப்பிட்டுள்ளனர்.

இரண்டாவது விடயம்: எரிமலை வெடிப்பால் அங்கு அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன. அங்கு கடலுக்குள் எரிமலை வெடித்தது செயற்கைக்கோளில் பதிவாகியுள்ளது.

இந்த காட்சி, கடல் அப்படியே பிளந்து நீர் வெளியே வருவது போன்று பதிவாகியுள்ளன. இது 80 மீற்றர் உயரம் வரை அலைகளை ஏற்படுத்திள்ளது. அந்த அலைகள் கடல் எல்லைக்கு வந்து கரையில் 2 அடி உயரம் வரையிலான அலைகளை ஏற்படுத்தியுள்ளன.

# சூகிக்கு எதிராக மேலும் 5 ஊழல் வழக்குகள் பதிவு



மியன்மார் ஜனநாயகத் தலைவர் ஆங் சான் சூகிக்கு எதிராக அந்த நாட்டு இராணுவ அரசு மேலும் 5 ஊழல் வழக்குகளைப் பதிவு செய்துள்ளது.

இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆண்டு கைதுசெய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள சூகி மீது ஏற்கெனவே 5 ஊழல் வழக்குகள் உள்ளன.

இந்நிலையில், அவர் மீது புதிதாக 5 ஊழல் குற்றச்சாட்டுகளை இராணுவ ஆட்சியாளர்கள் பதிவுசெய்துள்ளனர். அந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சூகிக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்க முடியும் என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மியன்மாரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கடந்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி இராணுவம் கலைத்து ஆட்சியைக் கைப்பற்றியது. அரசின் தலைமை ஆலோசகராக இருந்த ஆங் சான் சூகி, அவரது தேசிய ஜனநாயக லீக் கட்சியின் முக்கிய தலைவர்கள், ஜனாதிபதி வின் மைண்ட் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டனர். சூகி உள்ளிட்டோர் மீது பல வழக்குகள் தொடரப்பட்டன.

கடந்த 2020ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற தேர்தலில் கொரோனா கட்டுப்பாட்டு விதிகளை மீறியமை, கைதுசெய்து வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது அரசுக்கு எதிராக மக்களைப் போராடத் தூண்டியமை என்பன தொடர்பான இரு குற்றச்சாட்டுகளில் சூகிக்கு கடந்த மாதம் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், அந்தத் தண்டனை இரு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கம்பியில்லா தொலைத் தொடர்பு கருவிகளை (வாக்கி-டோக்கி) சட்டவிரோதமாக இறக்குமதி செய்தமை , தேர்தல் பிரசாரத்தின்போது கொரோனா விதிகளை மீறியமை ஆகிய வழக்குகளில் சூகிக்கு நீதிமன்றம் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து இந்த மாதம் தீர்ப்பளித்திருந்தது. இந்நிலையில், அவர் மீது மேலும் 5 ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மிரட்டும் வடகொரியா; மீண்டும் ஏவுகணை பரிசோதனை

வட கொரியா மேலும் இரு ஏவுகணைகளை பரிசோதித்துள்ளதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைக்கு பதிலடி கொடுக்கும் வகையில், வடகொரியா நேற்று முன்தினம் ரயிலிலிருந்து 2 குறுகிய தூர ஏவுகணைகளை ஏவி சோதனைகளை நடத்தியது. ஐ.நா. அமைப்பு, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பொருளாதாரத் தடைகளையும் பொருட்படுத்தாது வடகொரியா ஏவுகணை, அணு ஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

கொரோனா தொற்று, பொருளாதாரத் தடைகள், ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் நிர்வாக தவறுகளினால் வடகொரியாவில் கடும் உணவுப் பஞ்சம் நிலவி வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இருப்பினும், ஏவுகணை சோதனையை



வடகொரியா நிறுத்தவில்லை. இந்நிலையில், சமீபத்தில் நடத்திய இரு ஏவுகணை சோதனைகளுக்காக வடகொரியாவின் மீது அமெரிக்கா கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஆனால், இதற்கு சவால் விடும் வகையில் நேற்று முன்தினமும் வடகொரியா அடுத்தடுத்து 2 குறுகிய தூர ஏவுகணைகளை ரயிலிலிருந்து ஏவி பரிசோதித்துள்ளது.

தென்கொரியாவின் நிலப்பகுதியில் 430 கிலோமீற்றர் தூரத்தை 36 கிலோ மீற்றர் உயரத்தில் 2 ஏவுகணைகள் 11 நிமிடங்களில் கடந்து சென்று, கடலிலிருந்த இலக்கை தகர்த்தன. இது, இந்த மாதத்தில் நடத்தப்படும் 3ஆவது சோதனையாகும். ஏற்கனவே, கடந்த 5ஆம் திகதி தொலைதூர ஏவுகணை சோதனை மற்றும் கடந்த 11ஆம் திகதி ஹைப்பர்சோனிக் ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## 30 நாட்களில்

# உக்ரைன் மீது படையெடுக்க ரஷ்யா திட்டம்

## அமெரிக்கா தகவல்

உக்ரைனை அடுத்த 30 நாட்களில் படையெடுப்பு மூலம் கைப்பற்ற ரஷ்யா முயற்சிப்பதாகவும், அதனைக் கண்காணித்து வருவதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் சைபர் நடவடிக்கைகளை அமெரிக்க உளவுத் துறையினர் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இரு நாடுகளின் தலைவர்களான ஜோ பைடனும், ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் உக்ரைன் படையெடுப்பு தொடர்பான பதற்றத்தைத் தணிப்பதற்காக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில், உக்ரைனின் இணையத்தளங்களை ரஷ்யாவின் சைபர் பிரிவு முடக்கியிருப்பதாக உக்ரைன் அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதனால் பல இணையத்தளங்கள் செயலிழந்தன. அவை மறையும் முன்பு மோசமான நிலைக்குத் தயாராக இருங்கள் என்று குறுஞ் செய்தி மூலம் போர் மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

# யேமனின் 'மரீப்' நகரைக் கைப்பற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் போராட்டம்



யேமனின் எண்ணெய் வளமிக்க மரீப் நகர், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பிடியில் சென்று விடாமல் தடுக்க அந்நாட்டு இராணுவத்தினரும், அவர்களுக்கு உதவியாக ஐக்கிய அரபு அமீரகத்தின் இராணுவத்தினரும் இணைந்து போராடி வருகின்றனர்.

2015ஆம் ஆண்டு, சவூதி அரேபியாவின் ஆதரவுடன் யேமனில் பதவியேற்ற அரசு, ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்களால் கவிழ்க்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 7 ஆண்டுகளாக நடைபெறும் மோதலில் மரீப் நகரைச் சுற்றியுள்ள பல்வேறு மாவட்டங்களை ஹவுதி அமைப்பினர் கைப்பற்றியுள்ளனர்.

ஹைட்ரோ கார்பன் மற்றும் எண்ணெய் வளம் நிறைந்த மரீப் நகரைப் பாதுகாக்க சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் கடுமையாகப் போராடி வருகின்றன.

# ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணம் – 2022; ஆஸி.யை இன்று எதிர்கொள்ளும் இலங்கை

ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் நிலையில், குழு "டி"யில் இடம் பிடித்திருக்கும் இலங்கை இளையோர் அணி தனது இரண்டாவது போட்டியில் இன்று அவுஸ்திரேலிய இளையோர் அணியை எதிர்கொள்கிறது.



இலங்கை இளையோர் அணி கடந்த வெள்ளிக்கிழமை தனது முதல் போட்டியில் ஸ்கொட்லாந்து இளையோர் அணியை எதிர்கொண்டது. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 45.2 ஓவர்கள் நிறைவில் 218 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. 219 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி 48.4 ஓவர்கள் நிறைவில் 178 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்களையும் இழக்க, இப்போட்டியில் இலங்கை அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவு செய்தது.

இந்நிலையில், இலங்கை இளையோர் அணி தனது இரண்டாவது போட்டியில் இன்றைய தினம் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டியில் இலங்கை இளையோர் அணி அவுஸ்திரேலிய இளையோர் அணியை வீழ்த்தினால் அடுத்தடுத்த சுற்றுகளுக்கு முன்னேறக்கூடிய வாய்ப்பு காணப்படும்.

எனினும், அவுஸ்திரேலிய இளையோர் அணி தங்களது முதல் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் இளையோர் அணியை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் இன்று ஆரம்பம்

# ஜோகோவிச் பங்கேற்பதில் தொடர்ந்தும் இழுபறி நிலை

australian open



(ஏ.அகீல் சிஹாப்)

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட டென்னிஸ் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர், இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் அமைந்துள்ள மெல்போர்ன் பார்க் அரங்கில் நடைபெறவுள்ளது.

சர்வதேச டென்னிஸ் பேரவையினால் நடத்தப்படுகின்ற உலகின் மிக உயர்ந்த டென்னிஸ் தொடர்களில் ஒன்றான கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட டென்னிஸ் தொடரானது ஒரு வருடத்தில் நான்கு முறை நடைபெறுகின்றது. அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் மற்றும் யு.எஸ். (அமெரிக்க) ஓபன் ஆகிய தொடர்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இது 100ஆவது அவுஸ்திரேலிய ஓபன் தொடராகக் காணப்படும் அதேவேளையில், 54வது ஓபன் எரா தொடராகவும் காணப்படுகிறது.



ஆடவர் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனாக செர்பியாவின் நோவக் ஜோகோவிச் காணப்படும் அதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவின் சம்பியனாக ஜப்பான் வீராங்கனை நஓமி ஒசாகா காணப்படுகிறார். இதில் நடப்பு சம்பியனான நோவக் ஜோகோவிச்சின் கொரோனா தடுப்பூசி செலுத்திய விவகாரம் தொடர்பில், அவுஸ்திரேலிய விசா இரண்டாவது தடவையாக இரத்து செய்யப்பட்டிருக்கும் நிலையில், அவர் தொடரில் விளையாடுவாரா, இல்லையா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. அவ்வாறு ஜோகோவிச் விளையாடாவிட்டால் அவரது ரசிகர்களுக்கு இது மிகப் பெரிய ஏமாற்றமாக அமையும். காரணம் டென்னிஸ் உலகில் இதுவரையில் 20 கிராண்ட்ஸ்லாம் தொடர்களைக் கைப்பற்றியுள்ள ஜோகோவிச், அவுஸ்திரேலிய ஓபனைக் கைப்பற்றினால் உலகில் அதிக கிராண்ட்ஸ்லாம் தொடர்களைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையைப் படைப்பார். தற்போது ரோஜர் பெடரர், ரஃபேல் நடால் மற்றும் நோவக் ஜோகோவிச் ஆகியோர் தலா 20 கிராண்ட்ஸ்லாம் தொடர்களைக் கைப்பற்றியுள்ளனர்.

2019 இலிருந்து தொடர்ச்சியாக 3 ஆண்டுகள் அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடரைக் கைப்பற்றியிருக்கும் நோவக் ஜோகோவிச் தொடர்ந்து நான்காவது ஆண்டாக கைப்பற்றுவாரா என்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது. நடப்புச் சம்பியனான ஜோகோவிச் இதுவரையில் 9 அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர்களில் சம்பியனாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## தேசிய சதுரங்க சம்பியன் - 2022

# நிந்தவூர் அல்–அஷ்ரக் மாணவர்கள் சாதனை

(பொலிவேரியன் நிருபர்)

இலங்கை சதுரங்க சம்மேளனத்தினால் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட சதுரங்க சம்பியன் - 2022 போட்டியில் கமு/கமு/அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் நான்கு மாணவர்கள் தேசிய மட்ட மேஜர் டிவிஷன் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களாக இடம்பெற்ற இப்போட்டியில், ஏ.ஏ.பாஸில் அப்துல்லா, எம்.சி.ஹிமாத், எம்.எம்.எம்.அக்மல், எம்.ஆர்.ஏ.ஹசன் அல்-பன்னா ஆகிய நால்வரே தெரிவாகிய மாணவர்களாவர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் பங்குபற்றிய அனைத்து வீரர்கள்,




எப்போதும் உறுதுணையாக நிற்கின்ற பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர் மற்றும் கழகத்தின் பொறுப்பாசிரியர் ஏ.ஹலீம் அஹ்மதா, இலங்கையின் தேசிய நடுவரான ஏ.எம்.சாகீர் அஹமட் ஆகியோருக்கு அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை சார்பாகவும், அஷ்ரகியன் சதுரங்க சம்மேளனம் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தலைமைக்கு ஆபத்தாக முடிந்த தென்னாபிரிக்க தொடர்

# டெஸ்ட் தலைமையிலிருந்து நீக்கப்பட முன் விலகினாரா கோஹ்லி?

இந்திய டெஸ்ட் அணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக விராட் கோஹ்லி நேற்று முன்தினம் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து ஒட்டுமொத்த இந்திய அணியின் தலைமையிலிருந்தும் கோஹ்லி விலகியுள்ளார். அண்மையில் நடைபெற்ற ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் இருபதுக்கு 20 அணியின் தலைமைப் பதவியிலிருந்து கோஹ்லி விலகினார். ஆனால், அதன் பின்னர் ஒருநாள் தொடருக்கான அணியின் தலைமைப் பதவியிலிருந்து கோஹ்லி நீக்கப்பட்டார்.

இது தொடர்பாக விராட் கோஹ்லிக்கும், பி.சி.சி.ஐ. தலைவர் கங்குலிக்குமிடையே பல்வேறு கருத்து மோதல்கள் இடம்பெற்றதுடன், சொல்லாததை சொன்னதாக இருவரும் மாறி மாறிக் கூறிவந்தனர். பி.சி.சி.ஐயுடன் மோதலில் ஈடுபட்டபோதே விராட் கோஹ்லியின் டெஸ்ட் தலைமைப் பதவியும் பறிக்கப்பட்டிருந்திருக்கும். ஆனால், தென்னாபிரிக்கப் பயணம் செல்லும் இந்திய அணியின் தார்மீக மனவலிமை குறைந்துவிடக்கூடாது என்றும், அணியின் செயற்பாட்டில் ஏதேனும் சிக்கல் இருக்கக்கூடாது என்றும் பி.சி.சி.ஐ. கருதியதாகத் தகவல்கள் தெரிவித்தன.

அதேசமயம், டெஸ்ட் தொடரை இந்தியா இழந்ததாலோ அல்லது கோஹ்லியின் செயற்பாட்டில், துடுப்பாட்ட திறமையில் ஏதேனும் விமர்சனங்கள் எழுந்தோ கோஹ்லியின் தலைமைப்பதவியில் கத்தி விழுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் முன்பு தெரிவித்தன. தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் தோல்வி, மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது 'மைக்'கில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையை விமர்சித்தமை போன்ற செயல்கள் அவரின் பதவிக்கு ஆபத்தாக முடிந்தன.

எம்.எஸ்.டோனி கடந்த 2014ஆம் ஆண்டு டெஸ்ட் அணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகியபின் அதனை கோஹ்லி ஏற்றார். ஏற்ககுறைய 7 ஆண்டுகள் பதவியிலிருந்த கோஹ்லி இந்தியாவிலேயே வெற்றிகரமான தலைவர் என்ற பெருமையோடு வலம்வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது ஓய்வு தொடர்பில் விராட் கோஹ்லி ட்விட்டர் தளத்தில் பதிவிட்ட கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது, "ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஒவ்வொன்றும் நிறுத்தப்பட வேண்டும். என்னைப் பொறுத்தவரை டெஸ்ட் அணியின் தலைமைப் பதவிக் காலத்தையும் நிறுத்துகிறேன். என்னுடைய தலைமைப் பயணத்தில் பல்வேறு ஏற்ற இறக்கங்கள் இருந்தன. ஆனால், ஒருபோதும் என்னுடைய முயற்சியிலும், நம்பிக்கையிலும் தொய்வு வந்ததில்லை. இந்திய அணியை சரியான திசையில் கொண்டு செல்ல ஒவ்வொரு நாளும் கடினமான உழைப்புடன், இடைவிடாத முயற்சியுடன் 7 ஆண்டுகள் கடினமாக உழைத்தேன். இந்தப் பணியை நான் முழு நேர்மையுடன் செய்தேன். எதையும் விட்டுவிடவில்லை.

ஒவ்வொரு விடயத்தை நான் செய்யும் போதும் 120 சதவீத உழைப்பை வழங்குவேன் என நான் நம்புகிறேன். ஆனால், என்னால் செய்யமுடியாவிட்டால், அதைச் செய்ய இது சரியான நேரமில்லை என எனக்குத் தெரியும். நான் என் மனதில் முழுத்தெளிவுடன் இருக்கிறேன். என்னுடைய அணிக்கு நேர்மையற்றவனாக இல்லை. இந்திய அணியை நீண்டகாலம் வழிநடத்திச் செல்லவும், தேசத்துக்கு தலைமை ஏற்கவும் வாய்ப்பளித்த பி.சி.சி.ஐக்கும் நன்றி.

ஆரம்ப நாளிலிருந்து என்னுடைய நோக்கத்தோடு பயணித்த சக வீரர்களுக்கு நன்றி. எந்த சூழலிலும் யாரையும் கைவிட்டதில்லை. ரவி சாஸ்திரி, எம்.எஸ்.டோனியின் பங்களிப்பை நான் மறக்க முடியாது. டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்த இயந்திரம் நகர்ந்து முன்நோக்கி செல்ல ரவிபாய் காரணமாக இருந்தார். என்னுடைய தலைமையில் நம்பிக்கை வைத்து, இந்திய அணியை முன்னோக்கி என்னால் கொண்டு செல்ல முடியும் என்று நம்பிக்கை வைத்து செயற்பட்ட டோனி சகோதரருக்கு மிகப்பெரிய நன்றி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(பொத்துவில் நிருபர்)

தைக்கா நகர் எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி, நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், எவர்டொப் ஏ அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.









அட்டாளைச்சேனை தைக்கா நகர் எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி, அக்கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் தைக்கா நகர் ஸஹ்றா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் எவர்டொப் ஏ மற்றும் எவர்டொப் பீ ஆகிய அணிகள் மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய எவர்டொப் பீ அணியினர் 46 ஓட்டங்களைப் பெற்றனர். 47 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எவர்டொப் ஏ அணியினர் 48 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

எவர்டொப் ஏ அணி வீரர் ஸராப் 25 ஓட்டங்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்தார். இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் அவரே தெரிவு செய்யப்பட்டார். எவர்டொப் விளையாட்டுக் கழகத் தலைவரும், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எல். அஜ்மல் தலைமையில், இடம்பெற்ற இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.றபீக் கௌரவ அதிதியாகவும், சமூக சேவையாளர்களான என்.இம்தியாஸ், கே.எல்.ஏ.கபூர், என்.எம். றசாத், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.அஸ்வத் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், எவர்டொப் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் எனப் பலர் அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதன்போது திறமைகளை வெளிப்படுத்திய அணிகள், வீரர்களுக்குரிய பரிசில்கள் மற்றும் வெற்றிபெற்ற அணிக்குரிய வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப்பரிசு என்பவற்றை நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் 42 பலம்பொருந்திய அணிகள் பங்குபற்றிய இப்போட்டியானது, அக்கரைப்பற்று மிஸ்டர் கிளாக் நிறுவன அனுசரணையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7